Registered No. M-4483

Madras War Review { TAMIL 18-2-1944

யுத்த சஞ்சிகை

மலர் IV | 1944-ம் ௵ பிப்ரவரி மீ 18உ, வெள்ளிக்கிழமை | இதழ் 24



மிஸ்டர் ரூஸ்வெல்ட்.

☆

ஹிட்லரை அவருடைய நாட்டிலேயே தோற்கடிப்போம்

☆

உலகத்தை ஜயிக்க வேண்டு மென்று ஹிட்லர் போட்டிருந்த திட்டத்தை, சென்ற மாதங்களில் நாம் குலைத்து விட்டோம். அவர் திருட்டுத் தனமாகக் கைப்பற்றிய நாடுகளில் சிலவற்றை நாம் மீட்டு விட்டோம். அடுத்த சில மாதங்களில் நாம் மேலும் சில நாடுகளை மீட்போம். அவருடைய நாட்டிலேயே ஹிட்லரைச் சந்தித்துப் போராடி அவரை வெல்லுவோம்.

ஹிட்லருடைய படைகளை நாம் வெல்லும் போது, அவருடைய விஷப் பிரசாரத்தையும் வெல்லுகிறோம்.

மிஸ்டர் ரூஸ்வெல்ட், அமெரிக்கத் தலைவர், அமெரிக்க யூத காங்கிரசில் பிப்ரவரி மாதம் 12-ம் தேதி அறிவித்தார்.

பொருளடக்கம்.

	பக்கம்.		பக்கம்.
முகப்புப் படம்: மிஸ்டர் ரூஸ்வெல்ட் ..	1	தென்னிந்திய பொது மக்களுக்கு இராணுவ உதவி	5
"ஹிட்லரை அவருடைய நாட்டிலேயே தோற்கடிப்போம்"	1	அங்கும், இங்கும்	6
முரசொலி	2	ஜப்பான் பின் வாங்குவதற்கு காரணமென்ன?	7
தலையங்கம்: ரஷ்யர் வெற்றிகள்	3	பாட்டு: கிளிக்கண்ணி	8
போர் முனை நிகழ்ச்சி விளக்கம்	4	தென் துருவ ஆராய்ச்சி	9
வானொலி நாட் குறிப்புகள்	4	யுத்த நாட் குறிப்புக்கள்	12

முரசொலி

"மத்தியதரைக் கடல் போரரங்கத்தில் நேச நாட்டுப் படைகளின் மாபெரும் படைத் தலைவரான ஜெனரல் சர் ஹென்ரி மெய்ட்லந்து வில்சன், இத்தாலியி லுள்ள படைத் தலைவரான ஜெனரல் சர் ஹெரால்ட் அலெக்சான்டர் ஆகிய இருவர் அனுப்பிய அறிக்கைகளையும், நாம் பார்வை யிட்டோம். ரோமாபுரியைக் கைப்பற்றும் பொருட்டு நடைபெறும் மகா யுத்தத்தில் நிச்சயமாக நாம் வெற்றி பெறுவோ மென்று அவ்விருவரும் குறிப்பிட்டிருக்கிறார்கள்."

—மிஸ்டர் சர்ச்சில்,
பிரிட்டிஷ் முதல் மந்திரி, இத்தாலிய நிலைமையைப் பற்றி பிப்பிரவரி மாதம் 12-ம் தேதி விடுத்த அறிக்கை.

* * * * * *

"ஆஸ்திரேலியாவிலும் தென் மேற்குப் பசிபிக்கிலும் நான் கொஞ்ச காலந் தான் இருந்தேன். இருந்தாலும், ஜப்பானியர் ஏன தற்காப்புப் போராடுகிறார்கள் என்பதற்கான காரணங்களைப் போதுமான அளவு தெரிந்து கொண்டேன். நேச நாட்டுப் படைகள் எல்லாம், தாம் கடுமையாகப் போராட வேண்டு மென்றும், உறுதியாக வெற்றி கிடைக்கும் என்றும், பூரண நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்."

—மிஸ்டர் ஜேம்ஸ் பி. பாரெஸ்டர்,
அமெரிக்க கப்பற் படை உதவி மந்திரி, சிட்னியில் பிப்பிரவரி மாதம் 11-ம் தேதி குறிப்பிட்டார்.

* * * * * *

"ஜப்பானியர் வசம் கைதிப் பட்டிருக்கும் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாட்டினர் சுமார் 1,40,000 பேர்கள் இருக்கக் கூடும்."

—மிஸ்டர் ஈடன்,
பிரிட்டிஷ் அன்னிய நாட்டு மந்திரி, காமன்ஸ் சபையில் பிப்ரவரி மாதம் 9-ம் தேதி குறிப்பிட்டார்.

* * * * * *

"பசிபிக் மகா சமுத்திரத்தில் அமெரிக்கப் படைகள் போராடும் நோக்கம், சீனாவில் தளங்கள் அமைக்க வேண்டும் என்பது தான்."

—அட்மிரல் செஸ்டர் டபுள்யு. நிமிட்ஸ்,
அமெரிக்க பசிபிக் கப்பற் படைத் தலைவர், பிப்ரவரி மாதம் 10-ம் தேதி கூறினார்.

* * * * * *

"இந்த வருஷத்தில் பாசிசப் படை யெடுப்பாளர்களைக் கடைசியாக அடித்து, சோவியத் யூனியனைச் சேர்ந்த நாடுகளிலிருந்து அடியோடு விரட்டி விடக் கூடுமென்று நான் நம்புகிறேன்."

—பிரசிடென்ட் கலினின்,
சோவியத் பிரதிநிதிகள் சபைத் தலைவர், பிப்பிரவரி மாதம் 10-ம் தேதி கூறினார்.

* * * * * *

"இந்த யுத்தம் ஏவ்வளவு காலம் நடைபெறு மென்று யாரும் சொல்ல முடியாது."

—மெக்கென்சி கிங்,
கனடிய முதல் மந்திரி பிப்ரவரி மாதம் 12-ம் தேதி கூறினார்.

* * * * * *

"1943-ம் வருஷத்தை விட 1944-ம் வருஷத்தில் அமெரிக்க விமான உற்பத்தி 40 சத விகிதம் அதிகமாக யிருக்கிறது."

—மிஸ்டர் ஜோசப் டி. கீனன்,
அமெரிக்க யுத்த உற்பத்தி போர்டு உபதலைவர், பிப்ரவரி மாதம் 13-ம் தேதி கூறியது.

* * * * * *

"ஜப்பானிய எதிரியைத் தரையிலும் கடலிலும் ஆகாயத்திலும் தாக்கிப் போராடும் பொருட்டு, பெரிய ஆயத்தங்களை இந்தியா செய்து கொண்டிருக்கிறது. இதன் பொருட்டு, ஏராளமான வேலை யிருக்கிறது. தரைப் படைக்கும், கப்பற் படைக்கும், விமானப் படைக்கும் பயிற்சி யளிப்பது மட்டும் போதாது. நமது துறைமுகங்களைச் சீர்திருத்திப் பெருக்க வேண்டும். போக்கு வரவு வசதிகளையும், டிப்போக்களையும் அதிகப்படுத்த வேண்டும். பெரிய பெரிய இயந்திரங்களை யமைத்துக் காப்பாற்ற வேண்டும். நேச நாடுகளின் இராணுவ பலம் முழுவதையும் பயன்படுத்தி, கடைசியாக ஜப்பானை அடியோடு வெல்லும் பொருட்டு, இவை யெல்லாம் விரைவில் நடைபெற வேண்டி யிருக்கின்றன."

—மிஸ்டர் சி. எம். திருவேதி,
இந்தியா அரசாங்க யுத்தக் காரியதரிசி, இந்தியா சட்ட சபையில் பிப்பிரவரி மாதம் 14-ம் தேதி கூறினார்.

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV | 1944-ம் வருஷ பிப்ரவரி மீ 18உ, வெள்ளிக்கிழமை | இதழ் 24

ரஷ்யர் வெற்றிகள்

யுத்தம் நடத்த வேண்டுமானால், தளவாடங்களும் மற்ற ஊர்திகளும் வேண்டும். இவற்றிற்கு இரும்பு தேவை. இரும்பை உருவாக்கி பல வகைப் பொருள்களை செய்வதற்கு 'மாங்கனீசு'ம் வேண்டும். டினீப்பர் ஆற்று வளைவில் இவ்விரண்டும் அதாவது இரும்பும், மாங்கனீசும கிடைக்கின்றன. கிரிவாய் ராகில் ஏராளமான இரும்புச் சுரங்கங்கள் இருக்கின்றன. நிகோபோலில் மாங்கனீஸ் சுரங்கங்கள் இருக்கின்றன. ஆகவே, இந்தப் பகுதியை முன்னர் ஜெர்மன் படைகள் கைப்பற்றிய காலத்தில்; ரஷ்யப் படைகள் அந்தச் சுரங்கங்களை யெல்லாம் பாழாக்கி விட்டார்கள். என்றாலும், ஜெர்மானியர்கள் அவற்றை யெல்லாம் சீர் திருத்தி, பெரிதும் பலனடைந்து வந்தார்கள். இவை இரண்டும் தளவாட ஊற்றுக்கள் எனத் தக்கபடி ஜெர்மன் படைகளுக்கு உதவிக் கொண்டிருந்தன. நிகோபோலை மீண்டும் ரஷ்யர்கள் பிடித்துவிட்டால், ஆறு மாதங்களில் ஹிட்லர் தோற்றுவிடுவா ரென்று ஒரு பூகர்ப்ப நிபுணர் குறிப்பிட்டாராம். ஆகவே நிகோபோலை ரஷ்யர்கள் கைப் பற்றிவிட்டால்; ஹிட்லரின் விஷப் பல்லைப் பிடுங்கியது போலத் தான். இப்போது நிகோபோலையும் ரஷ்யர்கள் பிடித்து விட்டார்களென்றால், இது ஒரு மகத்தான வெற்றி தான்.

இதைக் கைப்பற்ற மிகச் சிறந்த போர்த் தந்திர முறையை செம்படைகள் கையாண்டன. முதலில் லெனின் கிராட் பகுதியிலும் ஜெர்மானியர் கைப்பற்றிய போலந்து எல்லைக் குள்ளும் ஜெர்மானியர்களுடன் போராடிக் கொண்டே போக்குக் காட்டி, திடீரென்று கியெபுக்குத் தென் கிழக்கே யுள்ள ஜெனரல் மான்ஸ்டீன் படைகளைத் தாக்கி, கானேப் மூலையிலிருந்து 10 டிவிஷன் ஜெர்மன் படைகளையும் மடக்கிக் கொண்டார்கள். இந்தப் படைகளை அழித்து விட்டால் நிகோபோல், கிரிவாய் ராக் ஆகிய இடங்களுக்குப் பேராபத்து நேரு மென்று அனைவரும் எதிர் பார்த்தார்கள். ஆனால், அந்தப்படைகளை அழிக்கு முன்னதாகவே, நிகோபோலையும் பிடித்து விட்டார்கள் செம்படைகள். கிரிவாய் ராக்கும் பிடிபடத் தக்க நிலைமையில் தான் இருக்கின்றது. நிகோபோல் மாங்கனீஸ் சுரங்கங்களைப் பாதுகாக்கும் பொருட்டு, நிகோபோலி லிருந்து டினீப்பர் ஆற்றிற்குக் குறுக்கே ஜெர்மானியர் அமைத்திருந்த அரண்களை செஞ்சேனைகள் தவிடு பொடியாக்கின. ஜெனரல் மலினோவ்ஸ்கி, அபோஸ்தலோவோ என்னும் ஒரு முக்கியமான ரயில்வே ஜங்ஷனைக் கைப்பற்றினார். அங்கிருந்த மஸுலுக் ஆற்றை யொட்டி வந்து டினீப்பர் ஆற்றிற்குத் தெற்கே வந்து சேர்ந்தார். வருகிற வழியில் இவர் இந்த மாங்கனீஸ் நகரத்திலுள்ள அரண்களை யெல்லாம் தகர்த்துக் கொண்டு அதைக் கைப்பற்றினார். ஜெனரல் மலினோவ்ஸ்கியின் மூன்றாவது உக்ரேனியப் படையும், ஜெனரல் டோல்புகின் தலைமையிலுள்ள நான்காவது உக்ரேனியப் படையும் தெற்கு நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கின்றன. சிங்கரேப்கா என்னும் ரயில்வே ஜங்ஷனைக் கைப்பற்ற வேண்டு மென்பது தான் இவற்றின் நோக்கம்.

அடிபட்ட பான் மான்ஸ்டீனின் படைகள் மீண்டும் திரண்டு ஒடெசாவைப் பாதுகாக்க முயலுவதாகத் தெரிகிறது. கூடிய வரையில் ருஷ்யர்கள் ருமேனிய எல்லைப் புறத்துக்கு வந்து விடாதபடி தடுக்க, அவர்கள் பகிரதப் பிரயத்தனம் செய்கிறார்கள். கானெப் மூலையில் சிக்கிக் கொண்டிருக்கும் ஜெர்மன் படைகளை நாசம் செய்துவிட்டால், ஜெனரல் கோனியேப் தென் மேற்கே நோக்கிப் போய், ஒடெஸ்ஸா-வார்சா ரயில்வே லைனைத் தாக்கக் கூடும். பான் மான்ஸ்டீனுடைய கேந்திர ஸ்தானம் இது தான். இதையும் ரஷ்யப் படைகள் பிடித்து விட்டால், வலது புறத்திலுள்ள ஜெர்மன் படைகளிடமிருந்து துண்டிக்கப் படுவார். கானேப் மூலையில் மகா கடுமையாக ஜெர்மானியர் போராடி ரஷ்யப் படைகளை விரட்ட முயற்சித்தனர். ஆனால் பலிக்கவில்லை. அந்த 10 டிவிஷன் ஜெர்மானியரும் 40 சதுர மைல்களுக்குள் அடங்கி யிருக்க வேண்டிய நிர்ப்பந்தமான நிலைமையை, ரஷ்யப் படைகள் உண்டாக்கி விட்டன.

கியெபுக்கு மேற்கே, ஜெர்மானியர் வயப்பட்டிருக்கும் போலந்தில், ரஷ்யர்கள் புகுந்து ஷிபிடோப்கா என்னும் முக்கியமான ரயில்வே ஜங்ஷனை கைப்பற்றிக் கொண்டார்கள். பெர்டிசேபிலிருந்து ரோப்னோஷக்குப் போகும் ரயில்வேயில் இது இருக்கிறது. ப்ரோஸ்குரோபுக்கும் டர்னோபோலுக்கும் இங்கிருந்து இலகுவில் போகலாம். ஜெனரல் பான் மான்ஸ்டீன் வின்னிட்சாவுக்குத் தெற்கேயுள்ள ரயில்வேயை பாதுகாத்துக் கொண்டாலும், ஆபத்து நீங்கிய பாடில்லை. ரோப்னோ, லக் முதலிய இடங்களிலிருந்து ரஷ்யப் படைகள் வந்து பாயக் கூடும். இப்போது ஷிபிடோப்கா கைப்பற்றப்பட்டு விட்டதனால், இந்த ஆபத்து இப்போது அதிகரித்து விட்டது.

லெனின்கிராட் போர் முனையில் லுகா என்னுமிடத்தை நம் ரஷ்யப் படைகள் வளைத்துக் கொண்டன. இந்த கேந்திர ஸ்தானத்தில் ஜெர்மானியர்கள் இன்னும் கடுமையாகப் போராடிக் கொண்டு தானிருக்கிறார்கள். இது ஒரு ரயில்வே ஸ்தானம். கிழக்கே யிருந்தும், வட கிழக்கே யிருந்தும், வடக்கே யிருந்தும் மூன்று ரஷ்யப் படைகள் கிளம்பி வந்தன. வட கிழக்கே யிருந்து வந்த படை, ஒரெடேஷ் என்னும் ஆற்றைக் கடந்து, லெனின்கிராட்-ட்னோ ரயில்வே மேலுள்ள ஒரிடெஷ் என்னும் பட்டணத்தைக் கைப்பற்றினார்கள். லுகாவுக்கு இது 30 மைல் தூரத்திலுள்ளது. லுகாவுக்குத் தென் கிழக்கே யிருந்த ஜெர்மன் படைகள் அழிந்து விட்டன.

லெனின்கிராட்-ஒடெஸ்ஸா ரயில்வேயிலுள்ள படெட்ஸ்கயா என்னு மிடத்தைக் காப்பாற்ற, ஜெர்மானியர்கள் அரும் பாடு பட்டார்கள். ஆனால் முடியவில்லை. வெற்றி பெற்ற ரஷ்யப் படைகள் கிழக்கே யிருந்து லுகாவையுந் தாக்கினார்கள்.

ஆகவே, ஜெர்மானியர்கள் ரஷ்யப் போர் முனைகளில் எல்லாம் அடுத்தடுத்துத் தோல்விகள் அடைகிறார்கள் என்பது கண்கூடு.

145042

போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

ரோமாபுரி யுத்தத்தில் வெற்றி நமதே!

பிப்ரவரி மாதம் 12-ம் தேதி மிஸ்டர் சர்ச்சில் ஒரு அறிக்கை விடுத்தார். அதில், மத்தியதரைக் கடல் போர்முனையின் நேச நாட்டுப் படைகளின் மகா படைத் தலைவரான ஜெனரல் ஸர் ஹென்றி மைட்லந்து வில்சனும், இத்தாலியப் போர்முனையின் நேசநாட்டுப் படைத் தலைவரான ஜெனரல் ஸர் ஹாரால்ட் அலெக்சாந்தரும் அனுப்பி யிருக்கும் அறிக்கைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார். இவற்றில் இத்தாலியத் தலைநகரமான ரோமாபுரிக்காக நடைபெறும் யுத்தத்தைக் குறித்துக் கூறியிருக்கிறார்கள். இந்த யுத்தத்தில் தாம் வெற்றி பெறுவது உறுதி யென்று அவ்விருவரும் கூறியுள்ளார்கள். மிஸ்டர் சர்ச்சில் அறிக்கையி னின்று ஒரு விஷயம் தெளிவாகத் தெரிகிறது. எதிரி பிரசாரத்தின் பயனாக உண்டாகக் கூடிய மனக் கிளர்ச்சியும் அச்சமும் அடியோடு மறைந்துவிடும். இந்தப் போர் நமக்கு நிச்சயமாக வெற்றி தருமென்று 5-ம் படை தலைவரான ஜெனரல் கிளார்க்கும் உறுதி கூறியிருக்கிறார். காசினோ, ஆன்சியோ ஆகிய இரு போர்முனைகளிலும் நிலைமை திருப்திகரமா யிருந்தது. ஜெர்மன் தாக்குதலை ஜெனரல் கிளார்க்கு இங்கே வரவேற்றார். ஏனென்றால் ஜெர்மானியர்களை ஏராளமாகக் கொல்லுவதற்கு இங்கே சந்தர்ப்ப மேற்படும். பிப்ரவரி மாதம் 7-ம் தேதி இரவு ஜெர்மானியர்கள் நம்மைத் தாக்கிப் போராட ஆரம்பித்தார்கள். சில இடங்களையும் கைப்பற்றினார்கள். ஆனால், ஆன்சியோ போர்முனையில், பிப்ரவரி மாதம் [illegible]-ம் தேதிக்குப் பிறகு, நேசப் படைகள் இழந்த எல்லா இடங்களையும் மீண்டும் கைப்பற்றி அரண் செய்து விட்டார்கள். இந்தப் போராட்டத்தைக் குறித்து, ஜெனரல் கிளார்க்கு குறிப்பிட்டதாவது :—

"சகிக்க முடியாதபடி கஷ்டமான நிலைமையில் போராட்டம் நடைபெறுகிறது. அடுத்தபடியாக, நமது படைகளெல்லாம் ஒன்றுபட்டு வெற்றியோடு ரோமாபுரிக்குப் போவோம் என்னும் உறுதிகொண்டு முன்னேறுகின்றன."

* * * *

இத்தாலியப் போர்முனையிலுள்ள நிலைமை பற்றி நாம் கீழ்க்கண்டவாறு சுருக்கமாகச் சொல்லலாம் :—

ஆன்சியோ போர்முனையில் 5-ம் படை பலமாக ஊன்றிக் கொண்டிருக்கிறது. போராட்டம் சற்று ஓய்ந்திருக்கிறது. அதாவது 5-ம் படையைக் கடலுக்கு விரட்டும் நோக்கத்தோடு, ஜெர்மன் படைகளை யெல்லாம் திரட்டித் தாக்குவதற்கு ஆயத்தங்கள் செய்து கொண்டிருக்கிறார்களென்று தான் அர்த்தம். காசினோ போர்முனையில் கடுமையான யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. அங்கே கைரோ என்னுமிடத்தை நேசநாடுகள் கைப்பற்றி விட்டன. அபி மலை மேலுள்ள 'பெனிடிக்டைன்' மடத்தைத் தம் கோட்டையாக ஜெர்மானியர்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதை நேச நாட்டு வெடிகுண்டுகள் தகர்த் தெறிய நேரலாம்.

மார்ஷல் கேசல்ரிங் தன் படைகளைத் திரட்ட ஒட்டாதபடி நேசநாட்டு வெடிகுண்டு விமானங்களும் போர் விமானங்களும் தாக்கிக் கொண்டே யிருக்கின்றன. கடற்கரையை யடுத்த போர்முனையில் மட்டும் 24 மணி நேரத்தில், 800 முறை நேசநாட்டு விமானங்கள் வட்ட மிட்டதாகத் தெரிகிறது. ரோமாபுரிக்குத் தென்கிழக்கேயுள்ள கடற்கரையை ஜெர்மானியர்கள் தாக்குவார்களென்று நேசநாட்டுப் படையினர் எதிர்பார்த்தனர். எனவே, ரோமாபுரி, டைசா, ப்ளாரென்ஸ் ஆகிய 3 நகரங்களுக்கும் இடையேயுள்ள முக்கோணத்திற்குட்பட்ட ரயில்வே ஜங்ஷன்களையும், பாலங்களையும், நேசநாட்டு வெடிகுண்டு விமானங்கள் தாக்கின. வட திசையிலிருந்து ரோமாபுரிக்குப் போகும் ரயில் பாதையை வெடிவிட்டன. அன்றியும் ரோமாபுரிக்குப் போகும் தென் வடல் ரோடுகள் பதினொன்றையும் வெடிவிட்டார்கள். இதன் பயனாக, எதிரிகள் தம் படைகளைத் திரட்டிக் கொள்ள முடியவில்லை. ஆகவே, தம் நிலைமையை உறுதிப்படுத்திக் கொள்ள நேசநாடுகளுக்கு இதனால் அவகாசம் கிடைத்திருக்கிறது.

"கஸ்டாவ் லைனைப்" பாதுகாக்க கேசல்ரிங் திட்டம்.

கேசல்ரிங்கின் திட்டங்கள் என்ன? உடனடியாக ரோம்-கபுவா ரெயில்வேயை விட்டு, நேசநாட்டுப் படைகளை விரட்டிவிடுவது தான் அவருடைய திட்டம். தெற்கேயுள்ள கரிக்லியானோ பகுதிக்குத் தேவையான ஜெர்மன் படைகளையும் தளவாடங்களையும் இது வழியாகத் தான் அனுப்புகிறார்கள். ரோமாபுரிக்குத் தெற்கே 20 மைல் தூரத்திலுள்ள அல்பானோ பகுதியி லிருந்து வடக்கே விட்டோவியா வரை ரயில்வேயின் தென்கரையை யொட்டி தொடர்ச்சியாக ஒரு ரயில்வே லைன் போட வேண்டுமென்பது ஜெர்மானியர் எண்ணம். "காஸ்டாவ் லைனை" நேசநாட்டுப் படைகள் நாசஞ் செய்யு முன்னதாக, நெட்டுனோ போர்முனையை நசுக்கி நாசஞ் செய்து விடவேண்டுமென்பது தான் கேசல்ரிங்கின் கடைசி திட்டம்.

இதுவரை ஹிட்லரின் "எஸ் எஸ்." படைகள், மெய்காவல் படைகள், சில பால்கன் படைகள் ஆகியவை, இத்தாலியப் போர்முனையில் தலை காட்டிய தில்லை; இப்போது அவை காணப்படுகின்றன. இதினின்று இந்தப் போராட்டத்தை விரைவில் முடித்துவிட வேண்டுமென்று ஜெர்மானியர்கள் கருதுகிறார்களென்று விளங்குகிறது. ஆனால் "கஸ்டாவ் லைன்" பல இடங்களில் நேசநாட்டுப் படைகள் பிளந்து கொண்டு முன்னேறி விட்டன என்பது இங்கே குறிப்பிடத் தக்கது. பல போர்முனைகளிலும் பிரிட்டிஷ், அமெரிக்க, பிரெஞ்சுப் படைகளை ஜெர்மன் படைகள் காட்டுமிராண்டித் தனமாக எதிர்த்து நிற்கின்றன. காசினோவில் கோர யுத்தம் நடைபெறுகின்றது. இதினின்றி ஜெர்மானியர் தம் சிறு படைகளை நேசநாட்டுப் படையினர் சூழ்ந்து கொண்டாலும் பரவா யில்லை யென்றும், "காஸ்டாவ் லைனி"லிருந்து தம் படைகள் பெருவாரியாக பின் வாங்கக் கூடா தென்றும் கருதுவதாகத் தெரிகிறது. காசினோவை நேசநாட்டார் கைப்பற்றியதனாலேயே ஜெர்மானியர் எதிர்ப்பு நின்று விடுமென்று எண்ணுவதற் கில்லை.

அங்கே மலைகள் அதிகம், மழையும் அதிகம். தம் முழு பலத்தையுங் கொண்டு போராட நேசநாட்டுப் படைகளுக்குச் சந்தர்ப்பமில்லாது போய் விடுகிறது. நெட்டுனோ போர்முனையில் கேசல்ரிங் தோற்று 5-ம் படை வெற்றி பெறுமானால், ரோம்-காபுவா லைன் நெடுக விருக்கும் படைகளை யெல்லாம் திரட்டி, ரோமாபுரிக்குத் தெற்கேயும் தென் கிழக்கேயு முள்ள லைனைக் கைப்பற்றிக் காப்பாற்ற முயற்சிக்கலாம்.

தம் திட்டம் நிறைவேறும் என்பது பற்றி ஜெர்மானியர்களே சந்தேகங் கொள்ளுவதாகத் தெரிகிறது. சமீபத்தில் லார்ட் ஹாஹா பெர்லின் வானொலி நிலையத்திலிருந்து ஒலிபரப்பிய தோர் பிரசங்கத்தில், ரோமாபுரி அவ்வளவு இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த தல்ல வென்று குறிப்பிடுகிறார். ரோமாபுரியின் வீழ்ச்சிக்கு இது முன்னெச்சரிக்கை போலிருக்கிறது. தாம் ரோமாபுரியை விட்டு வெளியேறு முன்னதாக அங்குள்ள முக்கியமான பல கட்டிடங்களில் சுரங்க வெடிகள் வைப்பதாகத் தகவல் கிடைக்கிறது. நேபில்ஸிலும் இது போலத் தான் செய்தார்கள். என்றாலும், தம்மாலானவரை ஜெர்மானியர்கள் ரோமாபுரியைக் காப்பாற்றப் பார்ப்பார்கள் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். நேசநாட்டுப் படைகள் அதைப் பிடிக்காதபடி தடுக்கும் பொருட்டு, எவ்வளவு பெரிய தியாகத்தையும் அவர்கள் செய்வார்கள் என்பதையும், நாம் நினைவிலிருத்திக் கொள்ள வேண்டும்.

வானொலி நாட் குறிப்புக்கள்.

சென்னை—18-2-44 மாலை 7-மணிக்கு "ஆசியா அக்கன்" அல்லது "ஜப்பானும் அரசியலும்" என்பது பற்றி மிஸ்டர் எஸ். பஞ்சநத முதலியார் பேசுவார்.

சென்னை—22-2-44 மாலை 7-மணிக்கு மிஸ்டர் கே. அருணாசலம் யுத்த விமரிசம் செய்வார்.

சென்னை—23-2-44 மாலை 7-மணிக்கு "யுத்த முயற்சி" என்பது பற்றி பேசப்படும்.

தென்னிந்திய பொது மக்களுக்கு இராணுவ உதவி

சமீபத்தில் சென்னையில், தென் படையின் பிரதம படைத் தலைவர் லெப்டினெண்ட் ஜெனரல் சர் சில் பியர்ஸ்போர்டு பியரெல் ஒரு பிரசங்கம் செய்தார். இராணுவத்தார் பொது மக்களுக்கு எந்தெந்த வகைகளில், குறிப்பாக உணவு சம்பந்தமாக எப்படி உதவுகிறார்கள் என்பது பற்றி, விளக்கிக் கூறினார். அவர் கூறியதாவது: "படை எந்தப் பகுதியில் தங்கி யிருக்கிறதோ, அந்தப் பகுதியிலுள்ளவர்கள் தான் புதிய உணவுப் பொருட்களைப் பெரும்பாலும் உதவ வேண்டும். ஆனால், தென் படைக்குப் பொது மக்கள் உதவ வேண்டியவை பெரிதும் குறைந்து விட்டது. ஏனென்றால், தம் தேவைக்குத் தக்கபடி உணவுப் பொருள்களைத் தாமே உற்பத்தி செய்து கொள்ள, இராணுவத்தாரே திட்டமிட்டு வேலை செய்து வருகிறார்கள்.

காய்கறிகள்

உணவுப் பொருள் சாகுபடியை விருத்தி செய்ய இராணுவத் திட்ட முன்னேற்றங் காரணமாக, பிரிட்டிஷ் இந்திய அமெரிக்க இராணுவங்களுக்குத் தேவையான காய்கறிகளில் முக்காற் பங்கு இராணுவத்தின் சார்பாக, மாகாண அரசாங்கங்களும், சுதேச மன்னர்களின் அரசாங்கங்களும் நடத்தி வரும் திட்டங்களினால் கிடைக்கிறது. சாகுபடியாகும் அனைத்தும் தாமே வாங்கிக் கொள்வதாக இராணுவத்தார் உறுதி கொடுக்கிறார்கள். அதிகப்படியாக ஏதேனு மிருந்தால், பொது மக்களுக்கு விற்கப்படும். இராணுவத்தார் வாங்கிய விலையை விடக் குறைந்த விலைக்கு விற்கும்படி நேர்ந்தால், அதனால் நேரும் நஷ்டத்தை இராணுவத்தாரே ஏற்றுக் கொள்ளுகிறார்கள்.

பொருள்

கீழ்க்கண்ட முறையில் இந்தத் திட்டம் சாதாரணமாக நிறைவேற்றப் படுகிறது:—

அதிகப்படி சிப்பந்திகள் சம்பளம், விவசாய டிமான்ஸ்ட்ரேட்டர்களின் பிரயாணப் படி முதலிய அதிகப்படி செலவுகளை அரசாங்கத்தாரும் இராணுவத்தாரும் சமபாகமாக ஏப்புக் கொள்ளுகிறார்கள். இந்த அதிகப்படி சிப்பந்திகள் மூலம், விவசாயிகளுக்கு, விதை, எரு முதலியவை வாங்கும் பொருட்டு முன் பணத்தை இராணுவத்தார் கொடுக்கிறார்கள்.

அன்றியும் விவசாய உத்தியோகஸ்தர்களிடம் இதற் கென்று இராணுவத்தார் கையிருப்புத் தொகையும் கொடுத்து வைத்திருக்கிறார்கள். இந்த உத்தியோகஸ்தருள் ஒருவரிடம் 6½ லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதைக் கொண்டு விவசாயிகளுக்கு முன் பணங் கொடுத்து, அவர்கள் மகசூலை ஒரு விலை வைத்து ரொக்கங் கொடுத்து எடுத்துக் கொள்ளுகிறார்கள்.

உற்பத்தி

நீலகிரியில் சென்னை அரசாங்க விவசாய இலாக்கா நடத்தும் காய்கறி உற்பத்தித் திட்டம், மிகச் சிறந்த பலன் தரத் தக்க திட்டங்களுள் ஒன்று. விரைவாகப் பெருகிக் கொண்டிருக்கும் இந்தத் திட்டத்தி லிருந்து வருஷந்தோறும் 3000 டன் இங்கிலீஷ் காய்கறிகள் இராணுவத்திற்குக் கிடைக்கின்றன.

நீலகிரியில் உருளைக் கிழங்கு சாகுபடியை முன்னிட்டு, சுமார் 4000 ஏக்கர் நிலத்தை சென்னை அரசாங்கத்தார் ஜாரி செய்திருப்பதன் பயனாக, மாகாண வாசிகளான பொது மக்களுடைய தேவைக்குத் தகுந்தபடி கிடைக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டு விட்டது.

மற்றும் சென்னை மாகாணத்தில் காய்கறி உற்பத்தித் திட்டங்கள் ஆரம்பமாகியும் திட்ட மிடப் பட்டும் வருகின்றன.

இந்தியா முழுவதிலும் மிகப் பெரியதும் சிறந்த பலன் தரத் தக்கதுமான திட்டம், பம்பாய் அரசாங்கத்தார் பூனா, நாசிக், அகமத்நகர் ஆகிய ஜில்லாக்களில் நடத்துவது தான். இந்த ஜில்லாக்களி லிருந்து 19,000 டன் உருளைக் கிழங்கும், 13,000 டன் காய்கறிகளும் வருஷந்தோறும் கிடைக்கின்றன. அதை விடச் சிறியதும், ஆனால் மகா உபயோகமானதுமான திட்டங்கள் கிழக்குத் தொடர்ச்சி மலையிலும் விசாகப் பட்டினத்திலும் ஹைதராபாத்திலும் நடைபெறுகின்றன.

விலைகள்

நீலகிரி உருளைக் கிழங்கு 100 பவுண்டுக்கு ரூ. 11-8-0 வீதமும், பூனா உருளைக்கிழங்கு ரூ. 15-10-0 வீதமும், ஹோசூர் பகுதியிலுள்ள காய்கறிகள் ரூ. 7-15-6 வீதமும், பம்பாய் மாகாணத்திலுள்ள காய்கறிகள் ரூ. 6-4-0 வீதமும் வாங்கிக் கொள்ளுவதாக, இராணுவத்தார் உறுதி கூறுகிறார்கள்.

இராணுவத்தாரும் அரசாங்கத்தாரும் கலந்து தான் இந்த விலைகளை நிர்ணயித்திருக்கிறார்கள்.

இப்போது மகசூலாகத் தக்க அல்லது நாற்றுக உள்ளவை.

பம்பாய் மாகாணம்	12,000	ஏக்கர்.
சென்னை மாகாணம்	6,000	ஷை
ஹைதராபாத் சமஸ்தானம்	460	ஷை
மைசூர் சமஸ்தானம்	300	ஷை

அன்றியும், சென்னை மாகாணத்தில் திட்ட மிடப் பட்டிருப்பது, 2,000 ஏக்கர்.

இராணுவங்களுக்குத் தேவையான அதிகப்படி உருளைக் கிழங்கை சாகுபடி செய்வதற்கு நீலகிரியில் விவசாயிகளுக்கு ஜாரி செய்யப்பட்ட நிலத்தையும் இதில் சேர்க்கப்பட் டிருக்கிறது. ஆனால், இராணுவங்களுக்குத் தேவையான காய்கறிகளை உற்பத்தி செய்வதன் பொருட்டு, மைசூரில் அமைக்கப்பட்டிருக்கும் உற்பத்தியாளர் சங்கத்தார் வசமுள்ள நிலம் இந்தப் புள்ளியில் சேர்க்கப்படவில்லை.

போக்கு வரவு சாதனங்கள்

பொது ஜனத் தேவைகளுக்கான பொருள்களை ஏற்றிக் கொண்டு வந்து சேர்க்கவும், ஏற்றிக் கொண்டு போகவும், கூடுமானவரை இராணுவ வண்டிகள் பயன்பட்டன. இந்த வகையில் சென்ற 6 மாதங்களில் மிகச் சிறந்த முறையில் இராணுவத்தார் உதவி யிருக்கிறார்கள்.

உதாரணங்கள் வருமாறு:—

(a) சென்ற நவம்பர் மாதத்தில் ஹரிஹரில் போக்குவரவுப் படை 40 முதல் 100 மைல் தூரம் வரை ஏறக்குறைய, 400 டன் பொருள்களை ஏற்றிக் கொண்டு போனது.

(b) மைசூரிலிருந்து பொங்களூருக்கு அவசரமாக 75 டன் பெருள்கள் ஏற்றிக்கொண்டு போகப்பட்டன.

(c) சென்ற நவம்பர் மாதம் முதற்கொண்டு 30 மோட்டார் லாரிகள் நீலகிரியிலேயே இருந்து கொண்டிருக்கின்றன. இவை உருளைக்கிழங்கை தோட்டங்களிலிருந்து கொண்டுவந்து சேர்ப்பதிலேயே ஈடுபட்டிருந்தன. இவற்றைக் கொண்டு 2000 டன் உருளைக் கிழங்கு சேர்க்கப்பட்டது.

(d) வங்காளப் பஞ்ச நிவாரணத்தை முன்னிட்டு, ஜெய்பூரிலிருந்து 60 மைல் தூரத்திலுள்ள ரயில்வே ஸ்டேஷனுக்குத் தானியங்களைக் கொண்டு போய்ச் சேர்க்கும் பொருட்டு, ஏறக்குறைய 400 மோட்டார் லாரிகள் சிக்கன்ட்ராபாதிலிருந்து பொப்பிலிக்கு அனுப்பப்பட்டன. நவம்பர் மாத மத்தியிலிருந்து இந்த லாரிகள் நாளொன்றிற்கு 2[illegible]0 டன் தானியங்கள் ஏற்றிப் போயின. தானியங்கள் பெரும்பாலும் வங்காளத்திற்குத் தான் அனுப்பப்பட்டன. சென்னை மாகாணத்திற்கும் ஓரளவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

(e) சமீபத்தில் சென்னையில் பெரு வெள்ளம் ஏற்பட்டபோது, பொது மக்களுக்கு இராணுவ மோட்டார் லாரிகள் பெரிதும் உதவின.

(f) அதிகாரிகளின் கோரிக்கைக்கு இணங்கி, வங்காளப் பஞ்சத்தில் அடிபட்டவர்களுக்கு உணவு தானியங்கள் விநியோகிப்பதற்கு உதவும் பொருட்டு, தென் படையைச் சேர்ந்த பெரும்பகுதியோர் தம் லாரிகளுடன் வங்காளத்திற்குப் போனார்கள்.

இவைமட்டு மன்றி, இன்னும் பலவகைகளிலும் சிவில் அதிகாரிகள் சார்பாக சப்ளைகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. இராணுவக் காரியங்களுக்குத் தேவையா யில்லாது அதிகப்படியா யிருந்த மோட்டார் வண்டிகளை பொது ஜன உபயோகத்திற்குப் பயன்படுத்துவது சம்பந்தமாக, நெருங்கிய தொடர்பு எப்போதும் இருந்து கொண்டே யிருந்தது.

வைத்தியம்

இராணுவ வைத்திய உத்தியோகஸ்தர்களுடைய உதவி தேவைப் படும் போதெல்லாம், சிவில் வைத்திய உத்தியோகஸ்தர்களுக்கு உதவும்படி கட்டளைகள் பிறப்பிக்கப் பட்டிருக்கின்றன.

வைத்திய இலாக்கா உதவி டைரக்டர் உள்பட 7 இராணுவ வைத்திய உத்தியோகஸ்தர்கள் வங்காளப் பஞ்ச நிவாரண வேலை செய்து வருகிறார்கள்.

கோழிக் குஞ்சு உற்பத்தி

நிலையாக இருக்கும் படை முகாம்களில், முட்டைகளும் கோழிக் குஞ்சுகளும் அதிகமாக உற்பத்தி செய்ய, இராணுவத்தார் பெரும் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். இதன் பயனாக, பொது ஜனச் சந்தையில் முட்டைக்கு அதிக கிராக்கி ஏற்படாது.

புகையிட்ட மீன்

வருஷந்தோறும் 10,000 டன் மீனுக்குப் புகைப் பிடித்து தகர டப்பிகளில் அடைப்பதற்கான தோர் திட்டத்தை சென்னை மாகாண வியாபாரக் கைத்தொழில் இலாகா நடத்திக் கொண்டிருக்கிறது.

கீழ் கரையிலும் மேல் கரையிலு முள்ள குப்பங்களில் டிப்போக்கள் ஏற்படுத்தப்படும். அங்கே மீன்கள் புகை யிடப்பட்டு தகர டப்பிகளில் அடைக்கப்படும். பிறகு இராணுவ சப்ளை டிப்போக்களுக்கு அனுப்பப்படும்.

அன்று கறந்த பால்

அன்று கறந்த பால் இராணுவத்திற்குத் தேவையா யிருப்பதை முன்னிட்டு, இராணுவப் பண்ணைகளைப் புதிதாக ஸ்தாபிக்கிறார்கள். உள்ள பண்ணைகளைப் பெருக்குகிறார்கள்.

நிற்க, பொது ஜன பால் பண்ணைகளில் அதிகமாகக் கறக்கும் பொருட்டு இராணுவத்தார் உதவி செய்கிறார்கள். தூரத்திலுள்ள இடங்களி லிருந்து பால் வாங்கிக் கொண்டு வந்து சேர்க்கும் பொருட்டு, லாரிகளும், பெட்ரோலும், டையரும் கொடுத்து உதவுகிறார்கள். இதன் பயனாக பால்காரர்கள் தம் பாலை நல்ல விலைக்கு விற்கவும், பல திசைகளுக்கும் பாலை யனுப்பவும் முடிகிறது.

பாலைச் சேகரித்து இராணுவ முகாம்களுக்கு சப்ளை செய்வதற்கும் இராணுவ லாரிகள் பயன் படுத்தப்பட்டன. மேலும் பொதுஜனப் பால் பண்ணைச் சொந்தக்காரர்களுக்கும், இராணுவத்தார் விருப்பத்திற் கிணங்கி மகாண அரசாங்கத்தாரும், கால் நடைகளின் தீவனத்தைப் பயிர் செய்து கொள்ளும் பொருட்டு, நிலங்கள் ஜாரி செய்திருக்கிறார்கள். தண்ணீர்ப் பாசன வசதியும் அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள்.

மூன்று இடங்களில், இராணுவ அரசாங்கப் பண்ணைகள் ஏற்படுவதற்குக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது தென்னிந்தியாவில் நடைபெறும் புதிய பரீட்சை. இதற்கு இராணுவத்தாரே பொறுப்பாளிகள்.

இராணுவப் பன்றிப் பண்ணை யமைப்பதற்கும் ஏற்பாடுகள் நடந்திருக்கின்றன.

இந்தத் திட்டங்களி லெல்லாம் மிகச் சிறந்த பொலி காளைகளே உபயோகப்பட்டிருக்கின்றன. ஆகையால் நல்ல ஜாதிக் கன்றுகள் தான் பிறக்கும். யுத்தத்திற்குப் பிறகு, இவை நிரந்தரமான நன்மையாக நம் நாட்டிற்கு அமையும்.

பிரிட்டிஷ் விமானப் படையின் முதலாவது இந்திய உத்தியோகஸ்தரான பிளைட் கமாண்டர் சுக்தாங்கர்.

அங்கும், இங்கும்

'ஆளைப்பார்த்து மலைக்காதே; ஊது கணம்' என்று ஒரு பழமொழி உண்டு. அதாவது, ஒரு ஆசாமி ஒரு ஊரிலே ஏதோ காலாடித் தனம் செய்து கொண்டிருந்தானாம். இதைப் பற்றி அடுத்த ஊர்க் காரர் ஒருவர் கேள்விப்பட்டாராம். 'என்னங்க ஐயா! நாலுபேராச் சேர்ந்து அவனைப் பிடிச்சி அறை அறைண்ணு அறைஞ்சா; தானு அடங்கிப் போறான் பெட்டிப் பாம்பாக!' என்றாராம் அவர்.

'அவன் பெரிய ஆளுங்க. பார்த்தாலே பூதம் மாதிரி இருக்கிறான். அவனை அழிச்சுச் செய்தால், ஆறு புது ஆள் செய்யலாம். அவனை அடிக்கிறதா?' என்றாராம் உள்ளூர் ஆசாமி.

'யாரப்பா அவன்? என்று அந்த காலாடியைப் பற்றி அடுத்த ஊர்க் காரர் விசாரித்தாராம். விசாரித்த பிறகு, 'ஓ! அந்தப் பயலா? அந்த ஆளைக் கண்டு மலைக்காதே ஐயா? அவனுக்கு உடம்பிலே ஒரு வியாதி; அதிலே ஆளு ஊதிப் போயிருக்கிறான். உண்மையிலே அவனுக்கு அதிகமாக சக்தி கிடையாது; வாயடியிலேயே ஊரை மிரட்டிக் கொண்டு திரிகிறான் போலிருக்கு. நாலுபேர் கூட வேண்டாம் ஐயா! ரெண்டு பேர் கடுமையாகத் தாக்கினாலும் போதும். அதோடு அவன் தீர்ந்தான் என்றாராம்.

மயக்கம்!

அந்த மாதிரி ஜெர்மனியன் ஆர்ப்பாட்டத்தைப் பார்த்து பலர் மயங்கிப் போயினர். பின்லாந்து கூட ஜெர்மனியின் வெற்றியிலே நம்பிக்கை வைத்து விட்டது. அந்த நம்பிக்கையோடுதான், அது, மகா சக்தி வாய்ந்த ருஷ்யாவையே பகைத்துக் கொண்டது.

இப்பொழுது ஜெர்மானியர், பல மாதங்களாகத் தொடர்ந்து உதை வாங்கிக்கொண்டே, பின்னால் போன வண்ணமாகத் தானிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் தலைகளைப் பத்திரமாகப் பாதுகாத்துக் கொள்ளுவதே, சிரமமாக இருக்கிறது. அப்படி யிருக்கிறபோது, பின்லாந்து விஷயத்தில் அதிக உதவி செய்ய முடியுமா?

லெனின்கிராட் நகருக்கு சுமார் நூறு மைல் வரை, கடற்பிரதேசமெல்லாம் காலியாகி விட்டதாம். அங்கே ஒரு ஜெர்மன் கப்பல் கூடக் கிடையாதாம். இனி இந்த சௌகரியத்தை ருஷ்ய கடற்படை உபயோகித்துக் கொண்டு, வட கடல்வழியாக பின்லாந்திற்கு ஜெர்மனியிலிருந்து செல்லும் உதவியைத் தடுத்து நாசம் செய்யக்கூடும்.

வெளி உதவி இல்லாவிட்டால், வெள்ளரிப் பிஞ்சு போலிருக்கும் பின்லாந்து தேசம் தனித்து வெகுகாலம் நிற்க முடியுமா என்ன? முன்பு ஒரு தடவை, பின்லாந்திற்கும் ருஷ்யாவுக்கும் நடந்த போரிலே, பின்லாந்து தேசத்தினர் ரோஷமாகத் தான் சண்டை போட்டனர்.

ஐயா, ஒரு நாயைத் துரத்த வீட்டிலே ஒரு சிறு கல் கூட இல்லை என்பதை வைத்துக் கொண்டு, அந்த வீட்டுக் காரருக்கு சக்தியே இல்லை, எவன் வேண்டுமானாலும் அவர் வீட்டிற்குள் நுழையலாம் என்று முடிவு கட்டிவிட முடியுமா என்ன? முன்பு பின்லாந்தோடு போராடிய ருஷ்யாவும், இப்பொழுது ராக்ஷஸர்கள் போன்ற ஜெர்மனியரைக் கதிகலங்க அடிக்கும் ருஷ்யர்களும் ஒன்று என்று எவனாவது நினைத்தால், அவனைப் போன்ற மட சாம்பிராணி எவனுமே இருக்க முடியாது.

மயக்கம் தெளியுமா!

இவ்வளவு காலம் ருஷ்யா பின்லாந்தை அதிகம் கவனிக்கவில்லை. காரணம், லெனின்கிராட் பிரதேசத்திலே ஜெர்மானியர் கொஞ்சம் பலமாகவே இருந்தது தான். லெனின்கிராடும் வருஷக் கணக்கில் முற்றுகையிடப்பட்டு, ஆனால் வணங்கா முடியுடன் இருந்து கொண்டிருந்தது.

இப்பொழுதோ, செஞ்சேனை வீரர்கள் ஜமாய்த்துத் தள்ளிவிட்டார்கள். ஒரு பெரிய மிருதங்க வித்வான் போட்டா போட்டியில் தன் ஆவர்த்தனம் வாசிப்பதுபோல், ருஷ்யர்கள், ஜெர்மன் படைகளை நொறுக்கித் தள்ளிவிட்டார்கள். லெனின்கிராட் நகர் விடுதலை யடைந்து விட்டது. அங்கிருந்து தெற்கே எழுபது மைல் தூரம் சென்றுவிட்டன ருஷ்யப் படைகள், அங்கே உள்ள முக்யமான நகரான லூகாவையும் கைப்பற்றி விட்டன.

இன்னொரு ருஷ்யப்படை எஸ்டோனியாவிற்குள் புகுந்திருக்கிறது. மற்றொரு படை போலந்திலே ஜெர்மனியரை பின்னுக்குத் தள்ளிய வண்ணமாக இருக்கிறது. யுத்தத்திற்கு முன்பு இருந்த இடத்திற்கு ஜெர்மானியர் துரத்தப்பட்டு வருகிறார்கள்.

இந்த நிலைமையில், போன வாரம், ருஷ்ய விமானங்களில் சில நூறு விமானங்கள், பின்லாந்துக்காரர்கள் எப்படி இருக்கிறார்கள் என்று பார்த்து வரப் போயிருக்கின்றன. நியாயந் தானே? பின்லாந்துகாரர் அடுத்த வீட்டுக்காரர் தானே. நேற்றுவரை 'தாட் பூட்' என்று பேசிக்கொண்டிருந்தவர், இன்று சப்தத்தைக் காணோம் என்றால், அவர் கதி என்ன ஆச்சு என்று பார்க்க வேண்டாமா? மெட்ராஸிலே இருக்கிறது மாதிரி இருக்கலாமா? மெட்ராஸிலே 'பக்கத்து வீட்டிலே யார் இருக்கிறார்கள்?' என்று யாரையாவது கேட்டால், 'தெரியாதுங்க!' என்ற பதில் தான் வரும். அக்கம் பக்கத்திலிருப்பவர்கள் யார், அங்கு என்ன நடக்கிறது என்பதைக் கவனிப்பது இங்கே வழக்கமில்லை. ஆனால் வெளியூர்களிலே, அதிலும் கிராமங்களிலே ஒரு தெருவிலே உள்ள அத்தனை வீடுகளிலும் இருப்பவர் யார் யார், அவர்களுடைய குடும்ப விஷயங்கள் என்ன என்பது அந்தத் தெருவில் வசிப்போர் ஒவ்வொருவருக்கும் நன்றாகத் தெரியும்.

பின்லாந்து நொறுங்குகிறது

நிற்க, ருஷ்ய விமானிகள் பின்லாந்து ஆசாமிகளைப் பார்த்து வர, ககன மார்க்கமாகப் போனார்களல்லவா? பின்லாந்தின் தலை நகருக்கே போனார்கள். அவர்கள் அந் நகரைப் பார்த்துவிட்டுத் திரும்பியபோது, அந் நகரத்திலே நூற்றுக் கணக்கான இடங்களில் தங்கச் சப்பரம் (நெருப்பு ஜ்வாலைகள்) பிரமாதமாகவே கிளம்பி யிருந்தன. நகரிலே பாதி பாழாகி விட்டதாம்.

அதற்கப்பால், இன்னும் சில பின்லந்து நகரங்களையும் ருஷ்ய விமானிகள் சுட்டெரித்திருக்கிறார்கள். இப்பொழுது, ஜெர்மானியர் தங்களைத் தாங்களே பூரணமாகப் பாதுகாத்துக் கொள்ள முடியாதபடி, தினம் விடிந்தால், பொழுது போனால் பெரிய நேசதேச விமானக் கூட்டங்களின் குண்டு வீச்சுகளுக்குக் குறியாகி, கதி கலங்கிப் போய்க் கிடக்கிறார்கள். அப்படியிருக்க, அவர்கள், பின்லாந்துக்கு விமானப் பாதுகாப்பிற்கு ஏதாவது அனுப்ப முடியுமா என்ன? தனக்கு மிஞ்சியல்லவா தர்மம்?

புத்தி வருமா?

பின்லாந்து தேசத்திற்கு அமெரிக்கர்கள் புத்தி சொல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. 'பின்னிஷ்காரர்களே! வீண் பிடிவாதம் பிடிக்காதீர்கள். பேசாது ருஷ்யரிடம் தலை வணங்கிப் பேசுங்கள். ஏதோ மரியாதையாகக் காலம் தள்ளலாம். இல்லாவிட்டால், பின்லாந்தின் வாழ்வெல்லாம், ருஷ்ய ராணுவ பலத்தின் முன் அற்பமாகவே போய்விடும். வீணாகக் கெட்டு அழிய வேண்டாம் என்று அவர்கள் சொல்லியாயிற்று. பின்லாந்திற்குப் புத்தி வருமா?

முதலிலே, பின்னிஷ்காரர்களில் சிலர் சொன்னார்கள், 'எது வந்தாலும் வரட்டும்; நாங்கள் வணங்கவே மாட்டோம்' என்று. ஆனால், அதற்கப்புறம் வரும் செய்திகளைப் பார்த்தால், பின்லாந்தின் மன உறுதியை ருஷ்ய வெடி குண்டுகள் தளர்த்தி விட்டிருக்க வேண்டும் என்றே தோன்றுகிறது. பின்லாந்திலிருந்து முன்பு ருஷ்யாவுடன் ஏதோ பேசப்போன மாஜி பிரதம மந்திரி ஒருவர் இருக்கிறார். அவர் ருஷ்யாவிலே பின்னிஷ் பிரதிநிதியாகக் கூட இருந்திருக்கிறார். அவர் இப்பொழுது ஸ்வீடன் தேசத்திற்குச் சென்றிருக்கிறார். நடு நிலைமை வகிக்கும் ஸ்வீடன் மூலமாக, ருஷ்யாவின் நிபந்தனைகள் என்ன என்று தெரிந்து கொள்ள அவர் விரும்புகிறார் என்று நினைக்கப்படுகிறது. பின்லாந்தில் உள்ள அரசாங்கத்தார், ராஜிநாமா செய்து விட்டதாக, ஒரு வதந்தி கிளம்பி யிருக்கிறது. பெரிய பயில்வானிடம் போய், பத்து வயசுப் பயல் ஒருவன் சண்டைக்கு நின்றால், முடிவு என்ன ஆகும் என்று சொல்ல வேண்டுமா?

ஹிட்லரின் படாடோபப் பேச்சுக்களையும், ஜெர்மனியின் யுத்த ஆரம்ப ஜோரையும் பார்த்து மயங்கிப் படுகுழியில் விழுந்த ஒரு சில தேசங்களில் பின்லாந்தும் ஒன்று என்று எதிர்கால சரித்திராசிரியர்கள் எழுதத் தான் போகிறார்கள். பின்லாந்து கடைசி நிமிஷத்திலாவது புத்திசாலித் தனமாக நடந்து கொள்ளும் என்று நினைக்கிறோம். இல்லாவிட்டால், அநியாயமாக பல ஊர்கள் பாழாகி விடும். இப்பொழுது அங்கே அதிகாரம் செலுத்தும் அத்தனைப் பேர்களும் பின்லாந்தின் பரம சத்துருக்கள் என்ற பட்டத்தைப் பெறுவார்கள்.

ருஷ்யரின் சக்தி

ருஷ்யரின் சக்தியைக் கண்டு உலகமே பிரமிக்கிறது. ஸ்டாலின்கிராட் நகரிலே நடந்த முற்றுகையின் போது, கைதியாக அகப்பட்ட ஒரு ஜெர்மன் ஜெனரல், இப்பொழுது கான்யெவ் என்ற பிரதேசத்தில் மாட்டிக் கொண்டு, அர்த்த மில்லாது துள்ளிக் குதிக்கும் ஜெர்மன் படைகளுக்கு, ரேடியோ மூலம் ஒரு வேண்டுகோள் விடுத்தாராம். 'ருஷ்யரது படைகள் இரும்புக் கோட்டை மாதிரி சூழ்ந்து கொண்டிருக்கின்றன. அந்தக் கோட்டையைத் தகர்த்துக் கொண்டு வெளியே தப்பிப் போகலாமென்று நினைப்பதே அசட்டுத் தனமாகும். பேசாது உயிரையும், பொருளையும் காத்துக் கொள்ள, சரணடைந்து விடுங்கள்' என்றாராம் அவர்.

வாஸ்தவந்தானே! ஸ்டாலின்கிராட் நகரையே நாஜிகளால் வைத்துக் கொண்டிருக்க முடியவில்லையே; அங்கிருந்து தப்பவும் முடியவில்லையே. அப்படி யிருக்க, இப்பொழுது எப்படித் தப்ப முடியும் அவர்களால்? ஸ்டாலின்கிராடிலே நாஜிகள் இருந்த பொழுது, அவர்களுக்கிருந்த பலம் அசாத்தியமாயிற்றே. இப்பொழுது ருஷ்யர்களால் சூழ்ந்து கொள்ளப்பட்டிருக்கும் ஜெர்மானியரிடம் ஒரு டாங்கி டிவிஷன் தானிருக்கிறது. இதை வைத்துக் கொண்டு என்ன செய்வது? ஒரு பெரிய வெண்டைக்காயை வைத்துக் கொண்டு, ஒரு பெரிய கல்யாணத்திற்கு கறி செய்யப் போதுமா? ருஷ்யர்களை இனி யாரும் நிறுத்த முடியாது. 'ஐயா! அது எப்படிச் சொல்லலாம் நீர்? நாளை பின்னிஷ்காரர்களுக்கும், ஜெர்மானியருக்கும் திடீரென அறிவு வந்து, நிபந்தனையற்று அவர்கள் நேச தேசத்தாரிடம் சரணடைந்து விட்டால், அப்பொழுது கூடவா ருஷ்யர்களை நிறுத்த முடியாது?' என்று கேட்பீர்கள். அப்படி அவர்களுக்குப் புத்தி வந்து விட்டால், உலகத்துக்கு அது க்ஷேமமாயிற்றே! ஆனால் ஜெர்மனியை அலங்கோலப் படுத்திக் கொண்டிருக்கும் ஹிட்லர், அந் நாட்டின் உயிரைப் பூராவாக வாங்கி விட்டுத் தான் போவார் போலிருக்கிறது. கிழக்கிலே சாவு, தெற்கிலே சாவு, வானத்திலிருந்து சாவு, இதோடு மேற்கே யிருந்தும் சாவு வர ஆரம்பித்து விட்டால், ஜெர்மனியின் கதை அதோடு தீர வண்டியது தான். பாவம்!

ஜெர்மனி வாலாட்டுவ தெப்படி?

ஜெர்மனி மீது அடிக்கடி ஆயிரக் கணக்கில் நேச தேச விமானங்கள் படை யெடுத்துப் போகின்றனவே, அப்படி யிருந்தும், ஜெர்மனியின் ராணுவ சக்தி குறையவில்லையே என்று நீங்கள் ஒரு கேள்வி கேட்கலாம். அது நல்ல கேள்வி தான்!

ஜெர்மனி இப்பொழுது ஏராளமான போர் விமானங்களைச் சிருஷ்டித்திருக்கிறதாம். அதிலே முக்கால் வாசிக்கு மேலே, ஜெர்மனி மீதுள்ள வானத்தைக் காக்கப் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றன. இந்தப் பாதுகாப்பு இல்லாவிட்டால், ஜெர்மனி பல மாதங்களுக்கு முன்பே விளையாடும் சீட்டுக்களால் கட்டப்பெற்ற வீடு மாதிரி நொறுங்கிப் போயிருக்கும்.

உள் நாட்டைப் பாதுகாக்க இவ்வளவு விமானங்களை நிறுத்திக் கொண்டதால் தான், சீமை மீதும், ருஷ்யாவிலும் அதிகப்படியான விமானங்களை அனுப்ப ஹிட்லரால் முடியா திருக்கிறது.

தலைகள் தான்; ஆனாலும் வேலை?

அவருக்கு இப்பொழுது ஏற்பட்டிருக்கும் வேலைக்கும், ஸ்டாலினுக்கு ஏற்பட்டிருக்கும் வேலைக்கும் ரொம்ப வித்தியாசமிருக்கிறது. ஹிட்லரும், ஸ்டாலினும் தங்கள் தங்கள் நாட்டுப் படைகளின் உயர் சேனாபதிகளாக இருக்கிறார்கள். ஸ்டாலினோ தினம் ஒரு சந்தோஷ அறிக்கையை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார். இந்த இந்த ஊரைப் பிடித்த இந்த இந்த சேனைக்கு, இந்த இந்தப் பெயர் என்று நாமகரணம் செய்து கொண்டிருக்கிறார். இந்த இந்த ஊரைப் பிடித்த இந்தப் படைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில், இத்தனை இத்தனை வெடிகள் சுடவேண்டும் என்று உத்திரவு போட்டுக் கொண்டிருக்கிறார்.

ஆனால் ஹிட்லரோ அனுதினமும் அழுது வடிய வேண்டி யிருக்கிறது. அடிக்கடி தமது படையினருக்கு, 'உயிரை விட்டாலும் கையில் உள்ள ஊரை விடாதீர்கள்' என்று சொல்லிக் கொண்டே இருக்க வேண்டியிருக்கிறது. உயிரைத் தான் அவர்களால் விடமுடிகிறது. ஆனால் ருஷ்ய நகர்களை அவர்களால் பிடித்துக் கொண்டிருக்க முடியவில்லை.

(8-ம் பக்கம் பார்க்க.)

ஜப்பான் பின் வாங்குவதற்கு காரண மென்ன?

பொருளாதார முறிவும் தளவாடப் பஞ்சமும்

(த. பா. நித்தியானந்தம்.)

ஜப்பானியர்கள் பாடு ஆட்டங் கொடுக்கிறது. "புலி பதுங்குவதெல்லாம் பாய்வதற்கு" என்று சொல்லுவார்கள். அது போல, பதுங்கித் தாக்குவதற்கு ஜப்பான் எத்தனம் செய்யலா மென்று பலர் நினைத்தார்கள். ஆனால், இப்போது தம் கேந்திர ஸ்தானங்கள் பலவற்றை ஜப்பானியர்கள் இழக்கிறார்கள். இதனால், அவர்களுக்கு ஏற்படும் நஷ்டம் கொஞ்சமல்ல. அங்கே நடைபெறும் போராட்டத்தில், நேச நாடுகளுக்கு நேர்ந்த நஷ்டம் மிக மிகக் கொஞ்சம். இதைக் கொண்டு, ஒரு விஷயம் தெளிவாகிறது: அவர்கள், தாம் கைப்பற்றிய நாடுகளைக் காப்பாற்றிக் கொள்வது பற்றி அவ்வளவாகக் கவலை கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. தம் தாய் நாட்டைத் தற்காக்கும் பொருட்டு, படைகளையும் தளவாடங்களையும் ஜப்பானிலேயே திரட்டி வைத்திருக்க வேண்டும். தாம் கைப்பற்றிய நாடுகளைக் குறித்து, ஏன் அவர்கள் அக்கறை கொள்ளவில்லை யென்பது இங்கே சிந்திக்கத் தக்கது. அந் நாடுகள் வற்றாது மூலப் பொருட்களை ஜப்பானுக்கு வழங்கிக் கொண்டிருக்கின்றன. இப்பொருள்கள் ஜப்பானின் யுத்தத் தளவாடங்கள் செய்வதற்குப் பெரிதும் பயன் படுவன. ஆகவே, இவ்வளவு சிறந்த பகுதிகளை இலகுவில் கைவிடுவதானால், உண்மையிலேயே ஜப்பானுடைய பலம் வெகுவாகக் குன்றிப் போயிருக்கத் தான் வேண்டும். அப்படியானால், ஜப்பானின் நாடு பிடிக்கும் படலம் நின்றுவிட்டது என்று தான் சொல்ல வேண்டும். அதுவும் எப்படிப்பட்ட சமயத்தில்? அமெரிக்கக் கப்பற் படைகள் திரண்டு வந்து போர் தொடுக்க ஆரம்பிக்கிற போது. இனி, பிரிட்டிஷ் கப்பற் படையும் விமானப் படையும், அமெரிக்கக் கப்பற் படையும் விமானப்படையும் சேர்ந்து தாக்க ஆரம்பித்தால், வெகு விரைவாக, எளிதில் தாம் கைப்பற்றிய நாடுகளை யெல்லாம் விட்டு விட்டு, ஜப்பானியர்கள் ஓட்டமெடுக்கத் தான் போகிறார்கள். ஜப்பானிய உள் அரண்களைக் கூட, முன்பு எதிர்பார்த்ததை விட விரைவாகவும் எளிதாகவும் மகத்தானதோர் விமானப் படையைக் கொண்டு தகர்த்து விடலாமென்று நிபுணர்கள் கருதுகிறார்கள்.

ஜப்பானியர் பலத்திற்கு 3 காரணங்கள்

மங்கோலிய இனத்தவர்களான ஜப்பானியர்களுடைய கண்கள் சிறியவை. ஆனால், அவர்களுடைய பார்வையும் குறைவா யிருக்கும். அந்தக் காரணத்தினால், குறி தவறாமற் சுட, அவர்களால் முடியாது என்று ஒரு சிலர் கூறலாம். அது சுத்தத் தவறு. உடல பலத்திலும் மனோ பலத்திலும் அவர்கள் குறைந்தவர்களல்ல. இலேசான எதிரிகளல்ல. உரம் மிகுந்த போர் வீரர்கள். தம் உயிரைத் துரும்பென மதித்துப் போராடும் இயல்புள்ளவர்கள். அவர்களுடைய பலத்திற்கும் மூன்று காரணங்கள் கூறலாம். முதலாவதாக, யாரும் எளிதில் தாக்க முடியாதபடி, பூகோள அமைப்பில் ஜப்பான் அமைந்திருக்கிறது. ஜப்பானைப் பிறர் தாக்க வேண்டுமானால், நெடுந் தூரம் கப்பல்களில் வந்து தான் தாக்க வேண்டும். கப்பல்களில் வருவது பெரும் ஆபத்துக்களுக்கு இடங் கொடுக்கும். ஆகவே தான், ஜப்பானின் எதிரிகள் கப்பல் வழியாக வந்து தாக்குவது சற்று கஷ்டம். விமானங்களிலிருந்து தாக்குவதற்கோ, ஜப்பானைச் சுற்றிலுமுள்ள பாய்ச்சல் தளங்களெல்லாம் ஜப்பானியர் வசமே யிருக்கின்றன. ஆகவே, ஜப்பானைக் கடல் மூலமாகவோ, விமானங்களைக் கொண்டோ தாக்குவது, அவ்வளவு எளிதல்ல. இரண்டாவதாக, ஜப்பானியப் படையில் 30 லட்சம் பேர்களிருக்கிறார்கள். யுத்தத் தளவாடங்களைக் கையாள்வதில் சிறந்த நிபுணர்கள். பலமான கப்பற் படையு மிருக்கிறது. விமானப் படையு முண்டு. இந்த விமானப் படை தான், கொஞ்ச காலத்திற்கு முன்பு, உலகத்தையே திகைக்க வைத்தது. மகா விரைவாகவும் அடுத்தடுத்தும் பல தலை சிறந்த வெற்றிகளை ஜப்பானுக்குத் தேடித் தந்தது. மூன்றாவதாக, யுத்தத்திற்குத் தேவையான எல்லா வகை மூலப் பொருட்களும் ஆசியாவின் கீழ் பகுதிகளிலும், கிழக்கிந்தியத் தீவுகளிலும் ஏராளமாகக் கிடைக்கின்றன. இவை இப்போது ஜப்பான் வசமிருக்கின்றன. இவற்றைக் கொண்டு, பலவகைத் தளவாடச் செய் பொருட்கள் செய்து, இராணுவங்களுக்குப் பயன்படத் தக்கபடி அனுப்பலாம். இவற்றைக் கொண்டு பல வருஷங்கள் வரை தொடர்ந்து போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கலாம். உலகத்திலேயே உற்பத்தியாகும் ரப்பரில் 90 சத விகிதமும், தகரத்திலே 55 சத விகிதமும், சர்க்கரையில் 15 சத விகிதமும், அரிசியில் 28 சத விகிதமும், 'பாஸ்பேட்'கள் 10 சத விகிதமும் ஜப்பானியர் கைப்பற்றிய நாடுகளில் கிடைக்கின்றன. இவை மட்டுமன்றி, இரும்பு, நிலக்கரி, எண்ணெய் முதலிய யுத்தத்திற்குத் தேவையான பல பொருட்களும் அங்கே கிடைக்கின்றன.

பலவீனமாகத் தோன்றும் காரண மென்ன?

இவ்வளவு பலமிருந்துங் கூட, ஜப்பான் பலவீனமாகத் தோற்றுவதற்குக் காரண மென்ன? அரிசி, உப்பு, புளி, மிளகாய், சீரகம், வெந்தயம், கடுகு, நெய், காய்கறிகள், விறகு முதலிய, உணவிற்கு வேண்டிய பொருட்கள் எல்லாம் இருந்தால், நம் பசி நீங்கி விடுமா? நீங்காது. அது போலவே, எல்லா வகை மூலப் பொருட்களும் ஏராளமாகவிருந்தாலும், அவற்றை யெல்லாம் முதலில் திரட்ட வேண்டும். ஜப்பானுக்குக் கொண்டு வந்து சேர்க்க வேண்டும். பெரும் பெரும் தொழிற்சாலைகளில் அவற்றை உருவாக்க வேண்டும். அதன் பிறகு தான், அவை பயன்படும். இதற்கேற்ற வசதிகள் ஜப்பானுக்கு உண்டா என்பது இங்கே கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயம். இந்த மூலப் பொருட்களை யெல்லாம் ஜப்பானுக்குக் கொண்டு வந்து சேர்க்க வேண்டும், இதற்குக் கப்பல்களும் ஏராளமாகத் தேவை. வேண்டிய அளவிற்கு சாமான் கப்பல்கள் ஜப்பானிடம் உண்டா? உண்டு என்றாலும், அவை சரக்குகளை ஏற்றிக் கொண்டு ஜப்பான் வந்து சேர்ந்து விட முடியுமா? வழியில் எத்தனைக் கட்டங்கள்? அமெரிக்க நீர் மூழ்கிக் கப்பல்களின் இலக்குத் தப்பி[illegible] வேண்டுமே. இந்த நீர் மூழ்கிக் கப்பல்களின் குண்டுகளுக்கு இரையானால், ஜப்பானுக்கு இரண்டு வகைகளில் அல்லவா நஷ்டம்? மூலப் பொருள்களுடன் கப்பல்களுமல்லவா மூழ்கிப் போய் விட நேரும். இப்படிப்பட்ட நஷ்டங்களுக்கு ஜப்பான் ஆளாகுமா? ஆகாது. ஆகவே தான், ஜப்பான் பலவீனமான நிலைமையி லிருக்கிற தென்று கூறுகிறோம். அன்றியும், மாத மொன்றிற்கு 600 முதல் 1,000 விமானங்கள் வரை ஜப்பானில் தயார் செய்யப் படுவதாகத் தெரிகிறது. இவை மிகவும் இலேசானவை. விமான வகைகளும் மிகவும் கொஞ்சம். தளவாடங்களையும் வெடி மருந்துகளையும் ஏராளமாக ஏற்றிக் கொண்டு போக முடியாது. வெடி மருந்துகளும் மட்டமானவை. நேச நாட்டினர் செய்யும் உற்பத்தி யளவிற்கு, ஜப்பான் உற்பத்தி செய்யவே முடியாது, யுத்தக் கப்பல்கள் கட்டுவதில், நாளடைவில் ஜப்பானைப் போல 3 அல்லது 4 மடங்கு அதிகமாக அமெரிக்கா கட்டிவிடும். இது உறுதி.

ஜப்பானுக்கு மூலப் பொருட்கள் பஞ்சம்

இவ்வளவு குறைபாடுகளிருந்தாலும், ஜப்பான் இப்போதைக்குப் பூரண சரணாகதி யடையாது. அதற்கு, அடிப்படையான பொருளாதாரக் குறைபாடுக ளிருக்கலாம். என்றாலும், தூரக்கிழக்கு நாடுகளை யெல்லாம் கட்டியாள வேண்டு மென்னும் எண்ணத்தோடு, பல வருஷங்களாக ஆயத்தங்கள் செய்து கொண்டு வந்திருக்கிற தல்லவா? எனவே, நெடு நாட்கள் யுத்தத்தை நடத்துவதற்கு ஆயத்தமாக இருக்கத் தான் வேண்டும். இருந்த போதிலும், தாமிரம், குங்கிலியம், பருத்தி, பட்டு, சணல், கம்பளி ரோமம், பொட்டுலுப்பு, 'பொட்டாசியம்' முதலிய பொருட்கள் அங்கே அரிதாகி விட்டன. அமெரிக்காவி லிருந்தும் இந்தியாவி லிருந்தும் ஜப்பானில் இறக்குமதியாகிக் கொண்டிருந்த பருத்தி நின்றுவிட்டது, இதன் பயனாக, ஜப்பானுக்குத் தேவையான அளவில் ஒரு பாதிக்குக் கூட அங்கே துணி உற்பத்தி செய்ய முடியாமல் திண்டாடுகிறார்கள். கம்பளித் துணிகள் உற்பத்தி செய்யலா மென்றாலோ, ஆஸ்திரேலியாவி லிருந்து தான் கம்பளி ரோமம் ஏராளமாக ஜப்பானில் இறக்குமதியாகிக் கொண்டிருந்தது. இப்போது, வட சீனாவி லிருந்தும் மங்கோலியாவி லிருந்தும் ஓரளவிற்கு இறக்குமதி யானாலும், ஜப்பானின் இராணுவத் தேவைகளுக்கே அவை போதவில்லை. இங்கே ஒரு கேள்வி எழலாம். ஜப்பான் கைப்பற்றிய நாடுகளில் பருத்தியும் கம்பளி ரோமமும் கிடைப்ப தில்லையா? ஓரளவிற்குக் கிடைக்கின்றன. என்றாலும், அவற்றைக் கொண்டு நெய்து முடிக்கத் தேர்ச்சியுள்ள தொழிலாளர்கள் அங்கில்லை. அன்றியும், நெய்து முடித்தாலும், அவற்றை சேதமாகா

மல் ஜப்பானுக்குக் கொண்டு போய்ச் சேர்க்க் கூடிய கப்பல் வசதிகள் இல்லே. போர்க் கப்பல்களின் எண்ணிக்கையி லும், வகைகளிலும், பெர்ல் துறைமுகச் சம்பவத்திற்கு முன்பு, ஜப்பான் கைதான் வெகுவாக ஓங்கி யிருந்தது. இப்போதோ, பல வகைகளில், அமெரிக்காவின் பசிபிக் கப்பற் படை மட்டும், அதை விடப் பலமடங்கு பெரிதாயிருக் கிறது.

இவ்வளவு குறைபாடுகளிருந்தும், ஜப்பான் இந்தப் போரைத் தொடர்ந்து நடத்துவதின் பொருள் தானென்ன? கிழக்காசிய நாடுகளனைத்திலும், தம் இனத்தாரே உயர்ந்த வர்கள் ; ஆளப் பிறந்தவர்கள் என்ற எண்ணம் அவர்க ளுடைய மனதில் ஊறிப் போயிருப்பது தான். இது பற்றி ஜப்பானியப் பேராசிரியராகிய, டோஷியோ டமூரா என்பவர் ஒரு பத்திரிகையில் எழுதி யிருப்பதை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாகும். அவர் எழுதுகிறார் :

" ஜப்பானியப் பொது மக்களின் அதிர்ஷ்டம் மகத்தா னது. ஆகவே, அவர்கள் தான் கிழக்காசியத் தலைமை தாங்கக் கூடியவர்கள். இதற்கு, ஜப்பானியர்கள் ஒவ் வொருவரும் தம் பழம் பெருமையை மனதிற் கொள்ள வேண்டும். மற்ற கீழ்த்தரமான ஆசிய நாட்டவர்க ளுடன் சேர்ந்து தம் உய்வுக்கு இழுக்குத் தேடிக் கொள்ளக் கூடாது மனித வாழ்வின் மிக உயர்ந்த லட்சியத்தை யடைவது தான், ஜப்பானுடைய நோக்கம். சென்ற 3,000 ஆண்டுகளாக, ஜப்பானிய மக்கள் உயர் வடைந்து கொண்டே வந்திருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் தான் கிழக்காசிய நாடுகளுக்குத் தலைமை வகிக்கத் தகுதியுடையவர்கள். இதை நியாய மென்று எல்லா ஆசிய நாடுகளும் ஒப்புக் கொள்ளுகின்றன."

கண்ணை மூடிக்கொண்டால், உலகம் இருண்டு விடுமா ?

இதற்கு அவர் கூறுகிற காரணம் என்னவென்று நாம் கவனிப்போம். மற்ற ஆசிய நாடுகளுக்கு உயரிய தேசீய வாழ்வின் அனுபவ மில்லையாம்! சரித்திரப் பெருமையுங் கிடையாதாம்! ஜப்பானியர்களுக்கு மட்டுந்தான் உண் டாம்! கண்ணை மூடிக் கொண்டு உலகமே இருண்டு கொண் டிருக்கிற தென்றெண்ணி யிருக்கும் பூனைக்குத் தான், ஜப்பானியர்களை ஒப்பிட வேண்டும்.

ஆகவே, ஜப்பானின் மூவகைப் படைகளும் போதுமான வையாயில்லை ; உற்பத்திகளும் பெரிதும் பாதிக்கப்பட்டிருக் கின்றன. கைப்பற்றிய தீவுகளையும் கேந்திர ஸ்தானங்களை யும் ஒவ்வொன்றாக இழந்து கொண்டு வருகிறது. நேச நாடுகளின் பலமோ, மகத்தானது. படை பலமும் உற்பத்தி பலமும் வெகு அதிகம். இந்த நிலைமையில் இந்தத் திமிர் கொண்ட ஜப்பானை கட்டாயம் தோற்கடிக்கத்தான் செய்வோமென்பது 'உள்ளங்கை நெல்லிக்கனி' போல் விளங்குகிறது.

[சென்னை அகில இந்திய வானொலி நிலையத்திலிருந்து ஒலிப்பரப்பப்பட்ட ஒரு சொற் பொழிவு.]

(6-ம் பக்கம் தொடர்ச்சி.)

சமீபத்தில் நிகாபோல் என்ற அதி முக்யம் வாய்ந்த நகரொன்றை விடாது பிடித்திருக்க ஹிட்லர் கட்டளையிட்டார். ஹிட்லரது படைகளும் கடு மையாகத் தான் போராடின. ஆனாலும் ரொம்பச் சுட்டுவிட்டதால், அந்த இடத்தை உதறிவிட்டு, ஜெர்மன் படைகள் ஓடவேண்டி வந்துவிட்டது.

யூக்ரேனில் ஜெர்மானியரது நிலைமை ரொம்ப மோசமாகத் தானிருக் கிறத். அவர்களுக்கு அங்கு சுகமென்பதே இல்லை.

அதிருஷ்டம் போச்சு !

ஒரு சிறு விஷயம். அதிர்ஷ்ட தேவதை ஹிட்லரை விட்டுப் போய் இரண்டு வருஷங்களாகி விட்டன. அக்காள் தான் அவரைச் சுற்றித் தாண்டவமாடிக் கொண்டிருக்கிறாள் இப்பொழுது. போனவாரம் ருஷ் யர்கள் கைக்கு 'லக்' அதாவது அதிர்ஷ்டம் (என்ற ஊர்) போய்ச் சேர்ந்து விட்டது. இதுவும் ஒரு அபசகுனந்தான் ஜெர்மானியருக்கு. ஜெர் மானியரது அதிருஷ்டம் போவதை உலகோர் நன்றாக அறிய வேண்டு மென்றே, அந்த நகருக்கு ருஷ்யர்கள் அத்தகைய பெயரை வைத்திருக் கிறார்களோ என்னமோ!

இத்தாலியிலே !

ருஷ்ய அரங்கத்திலே, சில இடங்களில் நடந்த மகா கோரப் போர்களை யும் தூக்கி அடிக்கும் தன்மையில், இத்தாலியிலே, காஸினோ என்ற இடத்திலே அதி பயங்கரமான சண்டை நடக்கிறதாம். அந்த நகருக் குள்நேச தேசப் படைகளும், ஜெர்மானியரும் கைகலந்து போராடுகிறார் களாம். ஒவ்வொரு வீடு, ஒவ்வொரு அறை, ஒவ்வொரு சுவர் என்று தீவிரமாகச் சண்டை போட்டு, பிடிக்கப் பார்க்கிறார்களாம். ஒரு வீட்டின் வாசற்படி வழியாக அமெரிக்கர்கள் நுழைவதும், புழைக்கடை வழியாக ஜெர்மானியர் வெளியேறுவதும் சர்வ சாதாரணமாகி விட்டதாம். எங்கெங் கிருந்தெல்லாமோ ஜெர்மானியருக்கு உதவிப் படைகள் வந்திருக்கின்றன வாம். டாங்கிப் படைகளை வேறு நிறைய சேர்த்திருக்கிறார்களாம்.

நாஸி முயற்சி

நேச தேசப் படைகள், இத்தாலியின் மேல் கரையிலே, ஜெர்மன் படை களுக்குப் பின்னால் போயிறங்கினார்கள். ஆனால், அது காரணமாக, ஜெர் மன் படைகள் எதிர்பார்த்தபடி பின்னடையவில்லை. அதற்குப் பதிலாக, ஜெர்மன் சேனபதி கெஸல்ரிங் புதிதாக ஒரு படையைச் சேர்த்துக் கொண்டு வந்து, புதிதாகக் கடற்கரையில் இறங்கி முன்னேறப் பார்க்கும் நேசப் படைகளை தள்ளிவிட முயற்சிக்கிறார். கடற்கரைக்கு அடுத்த மலைப் பிரதேசங் களில் ஜெர்மானியர் இருந்து கொண்டு சுடுகிறார்களாம். தானே இயங்கும் பீரங்கிகளை வேறே வைத்திருக்கிறார்களாம். நேச தேசப் படைகளுக்கு வேண்டிய அளவு ஆயுதங்கள், டாங்கிகள் எல்லாம் இருந்த போதிலும், மேற்கொண்டு உதவி வந்திறங்க வகை இல்லாதபடி, கடும் புயலும், மழையும், பனியும் தொந்திரவு செய்து கொண்டிருக்கின்றன.

அப்படியே நேச தேச விமானங்கள் நாஸிப் படைகளைத் தாக்க வந்தா லும், அவை வந்து போனதும், நாஸி விமானங்கள் திடீரெனத் தோன்றி, நேசப் படைகளைப் பருந்துப் பாய்ச்சலில் பாய்ந்து தாக்குகின்றன வாம். ரஸ்தாக்கள் எல்லாம் வழுக்குகின்றனவாம். இது வரை நேச தேசத்தார் சமாளித்துக் கொண்டு விட்டார்களாம். 'கொஞ்சமும் விட்டுக் கொடுக்க மாட்டார்கள் நம்மவர்கள். பயப்பட வேண்டாம்' என்று அங்குள்ள சேனபதிகள் சீமைக்கும், அமெரிக்காவிற்கும் தந்திகள் அடித் திருக்கிறார்கள்.

இது எதிர் பாராத நிலைமை தான். இம்மாதிரி நிலைமைகள் இரண்டா வது போர்முனைப் படை யெடுப்பின் போதும் ஏற்படலாம். அது காரண மாக, யுத்த முடிவு வருடக் கணக்கில் ஒதுங்கிப் போகவும் கூடும் என்கிறார் கானடா பிரதம மந்திரி.

எத்தனை காலம் ஆனாலும், நம்மவர்கள் விடப் போகிறார்களா? அது தான் இல்லை. ஹிட்லரிடமிருந்து, எல்லா நாடுகளையும் மீட்டுவிட்டு, நேரே பெர்லினுக்குப் போயே அவரை உதைக்க முடியும் என்கிறார் ஒரு நிபுணர்.

போன மாதம் நாஸி நீர் மூழ்கிகளில் பல பலியாகி யிருக்கின்றன. நேச தேசப் பாரா வேலை பிரமாதமாக நடக்கிறது. அதைக் கண்டு, நாஸி நீர் மூழ்கிகளும் வெகு உஷாராகவே வேலை செய்கின்றன. கண்ணை மூடிக் கொண்டு காரியம் செய்ய வந்தால், மண்டை உடைந்து போகும் என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டு விட்டார்கள். அமெரிக்காவிலே, 1944-லே சரியாக முனை முறியாமல் ஒரு லக்ஷம் விமானங்கள் தயாரிக்கத் திட்டம் போட்டு விட்டார்கள். எல்லாம் நெடுந் தூரம் பறக்கும், குண்டு வீசும் விமானங்கள். ஆமாம்! பெர்லினையும், டோகியோவையும் போ யடைந்து திரும்ப வேண்டுமோ இல்லையோ!

ஒரு தமாஷ் !

திரும்ப வேண்டும் என்றதும் ஒரு தமாஷ் நினைவிற்கு வருகிறது. இத் தாலியிலே எட்டாவது சேனை முனையிலே, இந்தியப் படைகள் நாஸிப் படை கள் இருக்குமிடத்திற்குக் கூப்பிடு தூரத்தில் இருந்தனவாம். கொஞ்ச நேரம் குண்டு வீசு நின்றதாம். இப்பொழுது பார்த்து, நாஸிகள், 'இந்தியர்களே! நீங்கள் உங்கள் நாட்டிற்குப் போவது தானே!' என்று கத்தினார்களாம், ஒலி பெருக்கிக் குழாய்கள் மூலம்.

இந்திய அதிகாரிகள் சிலர் 'அதற்காக அல்ல எல் அலாமினிலிருந்து உங்களை இவ்வளவு தூரம் துரத்தி வந்தது' என்று சட்டென பதில் சொன் னார்களாம். அதைக் கேட்ட நாஸிகளின் முகம் செத்தே போயிருக்க வேண்டும். அதற்குச் சிறிது நேரத்திற்கப்பால், அவ்வாறு செத்த முகங் கள், இந்தியரது குண்டு வீச்சால், தரையிலே விழுந்து புரண்டிருக்க வேண்டும். இந்தியரது வீர தீரச் செயல்கள் தான், இப்பொழுது உலகப் பிரசித்தமாயிற்றே!

இத்தாலியிலே மோரோ என்றொரு பகுதி. அங்கு, ஜெர்மானியர் பின் வாங்குகையில் ஒரு பாலத்தைத் தகர்த்து விட்டுப் போய்விட்டார்களாம். அதை இந்திய வீரர்கள் ஒரே ராத்திரியில் திருப்பிக் கட்டிவிட்டார்களாம். என்ன சாகசம்! பேஷ்!

கிளிக்கண்ணி.

(மிஸ்டர் அப்பர் சுந்தர முதலியார்.)

1 உலகத்தார் உய்ய எண்ணி உம்மால் கிடைத்த ஒன்றை
உதவிட முன்வருவீர்—மக்காள்—உயர் குணம் இதன்மே லுண்டோ.

2 சிறுதுளி பெருவெள்ளம், ஆகும் என்பதை ஆய்ந்து,
சிறுபொரு ளாக்கினுமே—மக்காள்—தினம் கொடுத் துயர்ந்திடுவீர்.

3 ஆங்கில ஆக்ஷிதன்னால் அடைந்திடும் நன்மையெல்லாம்
அன்னியர் ஆட்சிதன்னால்—மக்காள்—ஆகாதென் றேஅறைவீர்.

4 இல்லங்கள் தோறும்சென்று ஏற்றிடும் சாரணர்க்கு
இயன்றதைக் கொடுத்திடுவீர்—மக்காள்—இனிதேநீர் கொடுத்திடுவீர்.

5 சண்டையில் காயப்பட்டு தவித்திடும் வீரருக்காய்
தம்படி யாகிலும் நீர்—மக்காள்—தட்டாதே தந்திடுவீர்.

6 காகிதத் துண்டுகளை கவலையுடனே சேர்த்து
கவர்ன்மெண்டார் தன்னிடத்தே—மக்காள்—களிப்புடன் விற்றிடுவீர்.

7 உதவா இரும்புதன்னை, ஒன்றாகக் கூட்டிவைத்து
இதமாகத் தந்திடுவீர்—மக்காள்—இன்றே நீர் உதவிடுவீர்.

தென் துருவ ஆராய்ச்சி

வாரண்ட் ஆபீஸர் ஹூப்பரின் விளக்கம்

வாரண்ட் ஆபீசர் ஹூப்பர் தன் சரிதையை ஜூனியர் கமாண்டர் மேரி பௌர்க்கிடம் கூறுகிருர்.

தென் துருவத்தைக் கண்டு பிடிக்கக் கிளம்பிய கோஷ்டியின் தலைவர் ஸ்காட். இந்த கோஷ்டியில் மிகவும் கொஞ்ச வயதுள்ளவரா யிருந்தவர் ஹூப்பர். இவர் மார்பில் போலார் பதக்கமும் தண்டும் அணி செய்கின்றன. தென் துருவத்தின் குளிர் மிகுந்த பனி மலைகளில் துருவிச் சென்ற அவர், இப்போது தென்னிந்தியாவில் ஒரு இந்திய விமானப் படையி லிருக்கிருர். இந்தப் படை, நீலகிரியில் ஓரிடத்தில் ஓய்வு கொண்டிருக்கிறது. ஆராயும் அவருடைய அகன்ற நீலக் கண்கள், முன்பு பனி மலைகளைக் கண்டன; இப்போது வளர் குந்து பச்சைப் பசேலென விளங்கும் நீல மலையைக் கண்டு களிக்கின்றன.

இவர் 1889-ம் வருஷத்தில் பிறந்தார். தன் 11-வது வயதிலேயே தன் அபூர்வமான வாழ்க்கையை நடத்த ஆரம்பித்து விட்டார். ஒரு பாய் மரக் கப்பலில் 6 மாதங்கள் பிரயாணம் செய்து நியூசிலந்துக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் போனுர். தன் 15-வது வயதில், புகழ் பெற்ற 'கட்டிசார்க்' என்னும் கப்பலில் இங்கிலாந்திற்குத் திரும்ப வந்து சேர்ந்தார். இந்தப் பிரயாணத்திற்கு 5 மாதங்கள் பிடித்தன. இவர் கப்பற் படையில் சேர்ந்து 3, 4 வருஷங்கள் வரை போக்கு வரவுக் கப்பல்களில் வேலை பார்த்தார்.

1910-ம் வருஷம் தென் துருவத்தை நாடி ஸ்காட் கோஷ்டி கிளம்பியது. அப்போது ஹூப்பருடைய கட்டுக்கடங்காத உணர்ச்சிக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. இந்த கோஷ்டியில் சேர 8,000 பேர்கள் முன் வந்தார்கள். அவர்களில் மிகவும் இளமை வாய்ந்தவர் ஹூப்பர் தான். எனவே, அனைவரும் அவரைப் 'பையன்!' என்றே அழைப்பது வழக்கம். இவர்கள் ஏறிச் சென்ற கப்பல், மரத்தாலேயே கட்டப்பட்டது. அதன் பெயர் "டெர்ரா நோவா."

இந்தக் கப்பல் நியூசிலந்து போய்ச் சேர்ந்தவுடனே, கப்பலை விட்டிறங்கி நாட்டிற்குள் போகும் கோஷ்டியினருடன் ஹூப்பரும் போக வேண்டுமென்று காப்டன் ஸ்காட் கட்டளை யிட்டார். ஹூப்பருடைய ஆசையும் நிறைவேறியது.

வழியில் பல வகைக் கஷ்டங்கள்; ஆபத்துக்கள். அலைகள் வந்து கடுமையாக மோதி மட்டக் குதிரைகளை அடித்துக் கொண்டு போயின; சங்கிலிகளால் கட்டப்பட்டிருந்த நாய்களையும் அவை இழுத்துக் கொண்டு போயின. இஞ்சின் அறையில் மோதி தண்ணீர் மயமாக்கின. கழுத்தளவு தண்ணீரில் நின்று கொண்டு அங்கிருந்தவர்கள் அந்தத் தண்ணீரை அப்புறப் படுத்திஞர்கள். இப்படியாக, பல பனிக்கட்டிகளையும் பனி மலைகளையும் கடந்து 'அன்டார்க்டிக்கா'வுக்கு 1910-ம் வருஷம டிசம்பர் மாதம் வந்து சேர்ந்தார்கள். இவர்கள் பனிக்கட்டியின் மேல் தான் தங்க நேர்ந்தது. அப்போது அந்தப் பனிக்கட்டிகளில் பிளவு கண்டு அவை பெரும் பாதாளத்திற்குப் போகும். அதற்குத் தப்பி அந்தக் கோஷ்டியினரும் அவர்கள் கொண்டு போயிருந்த மிருகங்களும் தாண்டி மேலே வேறொரு பனிக்கட்டியின் மேல் குதிக்கும்படி நேர்ந்தது. மட்டக் குதிரைகளைப் பிடிக்கும் பொருட்டு திமிங்கிலங்கள் பனிக்கட்டிகளூடே தலையைத் தூக்கிக் கொண்டே வரும். இப்படிப் பட்ட ஆபத்தான நிலைமைகளுக்கெல்லாம் உள்ளாகி யிருந்த ஹூப்பருடைய முகத்தில், இப்போது அமைதி நிலவுகிறது. தாய் நாட்டைவிட்டே தாண்டாதவருக்குள்ள இன்பம், அவர் முகத்தில் தாண்டவ மாடுகிறது.

ஒரு மகா அபூர்வமான செயல்

ஸ்காட் கோஷ்டியார் மழை காலத்தில் இவான்ஸ் முனை என்னுமிடத்தில் விடுதியமைத்துக் கொண்டிருந்தார்கள். இந்தக் கோஷ்டியின் இரண்டாவது தலைவருடைய பெயர் லெப்டினெனன்ட் (இப்போது அட்மிரல்) இவான்ஸ். அவருடைய பெயரையே அந்த முனைக்கும் சூட்டினார்கள். இங்கே தம் தளத்தை அமைக்கும் பொருட்டு, ஒரு சிலர் தங்கி விட்டார்கள். மற்றவர்கள் காப்டன் ஸ்காட் தலைமையில் கிளம்பினார்கள். புகழ் வாய்ந்த ஒரு டன் டிப்போவை அமைக்க வேண்டுமென்பது தான், அவர்களுடைய நோக்கம்.

மறு வருஷம் அக்டோபர் மாதம் தென் துருவத்தைத் தேடிச் செல்லும் முற்பகுதிக்குத் தலைவராக இவான்ஸ் நியமிக்கப் பட்டார். அவர் கோஷ்டியில் ஹூப்பரும் சேர்ந்திருந்தார். சக்கர மில்லாத இரண்டு மோட்டார் வண்டிகளுடனும், சக்கர மில்லாத 6 வண்டிகளுடனும் மிருகங்களுக்குத் தீவனமும் தமக்கு உணவும் 3 டன் அளவிற்கு எடுத்துக் கொண்டு, இந்தக் கோஷ்டியினர் கிளம்பினார்கள். இவர்கள் கடக்க வேண்டியதோ பனிக்காடு. செங்குத்தான மலைகள் போல அவை காட்சி யளித்தன. பாதையோ மிகவும் மென்மையானது. எளிதில் வழுக்கும். எனவே விரைவில் முன்னேறிப் போக முடியாது. சில நாட்களுக்குப் பிறகு அந்த மோட்டார் வண்டிகள் செம்மையாக வேலை செய்ய வில்லை. ஆகவே, அவற்றைக் கைவிட்டுவிட்டு, மற்ற வண்டிகளில் ஏறிக்கொண்டு இழுத்துச் செல்ல வேண்டியதாயிற்று. இந்தக் கடுமையான வேலையை '3 போர்களும் ஒரு பயனும் செய்து முடித்தார்கள்' என்று இவான்ஸ் குறிப்பிட்டிருக்கிருர்.

அந்தப் பனி உறைந்த பெருவெளியில் உறங்குவதற்குக் கூட, அவர்கள் தம் உடைகளைக் கழற்றுவதில்லை. ஆனால் தம் பாதரட்சைகளை மட்டும் அவ்வப்போது மாற்றிக் கொண்டிருந்தார்கள். இவர்கள் போய்ச் சேர்ந்த இடத்தில் கற்களைக் கொண்டு ஒரு பிரம்மாண்டமான மலையைச் சமைத்தார்கள். அதற்கு ஹூப்பர் மலை யென்று பெயர் சூட்டினார்கள். இதன் மூலம் நம் இளம் வீரரை கௌரவித்தார்கள். அதன் மீது ஒரு கொடி

ஸ்காட் கோஷ்டியார் இவான்ஸ் முனையில் இறங்கினார்கள். கோலை ஊன்றிக் கொண்டு நடுவில் நிற்பவர் தான் காப்டன் ஸ்காட், அவருக்கு அடுத்த ஸ்தானத்தி லிருந்த லெப்டினென்ட் (இப்போது அட்மிரல்) டெட்டர், அவருக்கு இடது புரத்தில் கைகளைக் கட்டிக் கொண்டு நிற்கிறார். இந்த கோஷ்டிப் "பையன்" (ஹூப்பர்) வலது புரத்தில் மூன்றாவதாக நிற்கிறார்.

நாட்டினார்கள். இந்தக் கொடி அதை யடுத்த பல மைல்கள் தூரத்திற்குத் தெரிகிறது. அப்போது ஸ்காட் கோஷ்டியார் தம் உடல் பலம் மிகுந்த ஸைபீரிய மட்டக் குதிரைகளின் மேல் வந்து கொண்டிருந்தார்கள்.

ஆனால் மனிதருக்கு உணவும், மிருகங்களுக்குத் தீவனமும் குறைந்து விட்டன. குதிரைகளைக் கொன்று அதன் இறைச்சியை மனிதர்கள் தின்றார்கள். நாய்களுக்கும் போட்டார்கள். 'பியர்ட் மோர் க்ளேசியர்' என்னுமிடத்தில் தம்மிடமிருந்த கடைசி குதிரையையும் ஈவிரக்க மில்லாமல் கொன்று உண்டு விட்டார்கள்.

இவ்வாறாகப் பல மாதங்கள் வரை பெரும் கஷ்டங்களுக்கு உள்ளானார்கள். பெரும் பெரும் பனிமலைகளைத் தாண்டியும் கிடுகடு பாதாளங்களைக் கடந்தும் இந்த ஆராய்ச்சி யாளர்களை அழைத்துக் கொண்டு போனார்கள். இரண்டு பனி மலைகளுக்கு இடையேயுள்ள பெரும் பள்ளங்களைக் கடக்க வேண்டி, பனிக் கட்டியாலான பாலங் களைத் தாண்டி சென்றார்கள். இது மகா ஆபத்தான நிலைமை தான். மகா கடுமையான குளிர். நாளடைவில் ஹூப்பர், இவான்ஸ் முனைக்குத் திரும்பி வந்தார். இது தான் அவர்களுடைய தளம். பிறகு மற்றவர்களோடு சேர்ந்துகொண்டு 'ஒன் டன்' என்னுமிடத்திற்குப் போனார். அங்கே, ஸ்காட்டுக்கு விசேஷ உணவு டிப்போ ஒன்றை அமைத்தார். இது நிகழ்ந்தது 1942-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில். ஸ்காட் தென் துருவத்தைக் கண்டுபிடித்து விட்டு அங்கே திரும்ப வந்து சேருவாரென்று எதிர்பார்த்து, தம்முடன் சில நாய்களை இந்தக் கோஷ்டியார் கொண்டு போயிருந்தார்கள். தாம் தங்கியிருந்த 'ஒன் டன்' டிப்போவுக்கு 11 மைல் தூரத்திலே, காப்டன் ஸ்காட் தன் கூடாரத்தில் மடிந்து கொண்டிருக்கிறார் என்ற விஷயம், வாரண்ட் ஆபீசர் ஹூப்பருக்கு எப்படித் தெரியும்? காப்டன் ஸ்காட் தன் நாட்குறிப்புப் புத்தகத்தில், தன் நடுங்கும் விரல்களைக் கொண்டு, சாகுந் தருவாயிலும் தான் கொண்டிருந்த நம்பிக்கையைக் குறித்தும், தனக்காகவும் தன் கோஷ்டியைச் சேர்ந்த மற்றவர்களுக்காகவும் கடவுளைப் பிரார்த்தித்தும் குறிப்புக்கள் எழுதி யிருக்கிறார்.

தென் துருவத்தைத் தேடிச் சென்ற சிறுவனான ஹூப்பர் திரும்பி வரும்போது அமைதி நிறைந்த முகத்தினனான வாலிபனாகத் திரும்பினார். அவர் முகத்திலுள்ள கரும்புள்ளிகள் பனியினால் அடிபட்ட அடையாளங்கள்.

"பையன்" பனிக் காட்டில் முன்னேறிப் போகத் தயாராகிறார்.

"வாரண்ட் ஆபீசர் ஹூப்பரின் களும், மருமகனும். இவர் விமானப் படையில் ஒரு 'விங் கமாண்ட'ராக இருக்கிறார்."

தென் துருவக் கோஷ்டியின் முன் படை, தம் மோட்டார் வண்டிக் கருகில் நிற்கிறது. வலது கோடியில் ஹூப்பரும் அவரை யடுத்து லெப்டினெண்ட் இவான்சும் நிற்கின்றனர்.

மீட்சிக் கோஷ்டியினருக்கு இந்தியக் குதிரைகள்

பல மாதங்கள் கழிந்தன. மீட்சிக் கோஷ்டி அக்டோபர் மாதம் கிளம்பியது. எப்போதும் இனிமை தவழும் ஹூப்பரின் இளம் முகத்தில், கவலை களைத்தது. மீட்சிக் கோஷ்டியில் ஒருவராக இவரும் சேர்த்துக் கொள்ளப் பட்டார். இப்போது இவர்களிடம் மட்டக் குதிரைகள் இல்லை. ஆகவே, இந்தக் கோஷ்டிக்கு இந்தியா அரசாங்கத்தார் அனுப்பிய கு ரைகளைப் பயன் படுத்திக் கொண்டார்கள்.

அந்த ஓயாத பனிப் பெருவெளியிலுள்ள பனிமலையின் மீது ஒரு மரச் சிலுவை ஊன்றப் பட்டிருப்பதை இன்றும் காணலாம். இங்கே தான் ஸ்காட்டும் அவருடைய வீரத் தோழர்களான மூவரும் பனிக் க டிகளால் மூடப்பட்டு புதைந்திருந்தனர். இதை அந்த மீட்சிக் கோஷ்டியினர் கண்டு பிடித்தனர். பிறகு, காப்டன் ஒட்ஸைத் தேட ஆரம்பித்தார்கள். இந்த வீரரைப் பற்றிய அறிகுறிகள் ஒன் ம் கிடைக்கவில்லை. எனவே மற்றொரு சிலுவையை அங்கே ஊன்றி "இங்கே தான் மற்றொரு வீர மிக்க கனவான் மாண்டார்" என்னும் எழுத்துக்களைப் பொறித்தனர்.



மௌண்ட் ஹூப்பரில் "பையன்" ஹாப்பர் அடுப்பேற்றி குளிர்காய்ந்து கொண்டே சமையல் செய்கிறார்.

ஸ்காட் கோஷ்டியில் எஞ்சியிருந்தவர்கள் தென் துருவத்தைத் சேடிக் கிளம்பினார்கள். விஞ்ஞான அறிவைப் பெருக்குவது தான் இந்தக் கோஷ்டியின் நோக்க மென்று இங்கே குறிப்பிடுவது அனவசியமாகும். நம் இளைஞரின் ஆட்டபாட்டங்கள் இந்த பனிப் பெருவெளிகளில் இன்னும் முடிந்தபா டில்லை. "மௌண்ட் ப்ரிபஸ்" என்னும் எரிமலையைக் கண்டு பிடிப்பதில் அந்த விஞ்ஞானிகளோடு ஹூப்பரும் சேர்ந்து வேலை செய்தார். அங்கிருந்து நிலக்கரி, புதைந்திருந்த கட்டைகள், கற்கள், பறவைகள், மீன்கள், முட்டைகள், பூக்கள், புழுக்கள், முதலியவற்றைச் சேகரித்தார்.

இந்தக் கோஷ்டியைச் சேர்ந்த ஹூப்பருக்கும் மற்றும் மூவருக்கும் மன்னர் பிரான் தன் அரண்மனையில் "அண்டார்க்டிக்" பதக்கத்தைப் பரிசளித்தார்.

மறு வருஷம், முதல் மகாயுத்தம் ஆரம்பமானது. ஹூப்பர் உடனே படையில் சேர்ந்தார். பிரான்சிலும், சலோனிகாவிலும், இஜிப்டிலும் நடைபெற்ற போராட்டங்களில் கலந்து கொண்டார். இவரும், இவரது சகாக்களும் ஏறிச் சென்ற கப்பல் வட கடலில் எதிரிகளால் தாக்கப் பட்டது. அப்போது ஹூவரின் தோழர்கள் இறந்துவிட்டார்கள் ஆகவே தென் துருவத்தைத் தேடிச் சென்ற கோஷ்டியினரில், ஹூவர் ஒருவர் தான் இன்னும் உயிரோடிருக்கிறார்.

1940-ம் வருஷம் இவர் பிரிட்டிஷ் விமானப் படையில் சேர்ந்தார். 9 மாதங்களில் வாரண்ட ஆபீசரானார். அந்தப் படையிலேயே இருப்பதாக முடிவு செய்திருக்கிறார். இவர் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டார். இந்த அழகிய நாட்டின் பல பகுதிகளையும் கண்டார்.

காப்டன் ஸ்காட் தென் துருவத்தை யடைந்தது ஜனவரி மாதம் 17-ம் தேதி. ஆண்டு தோறும் லண்டன், ரீஜெண்ட் தெருவிலுள்ள கபே ராயலில் அண்டார்க்டிக் பதக்கம் பெற்றவர்களில், வாக் கூடியவர்கள் எல்லோரும் ஜனவரி மாதம் 17-ம் தேதியை யடுத்துள்ள வெள்ளிக்கிழமை கூடுவது வழக்கம். இந்தச் சங்கத்தில் 34

(12-பக்கம் பார்க்க.)

யுத்த நாட் குறிப்புக்கள்

பிரிட்டனும் ஜெர்மனியும்.

பிப்ரவரி 9.—ஐந்து பிரிட்டிஷ் யுத்தக் கைதிகளைக் கொன்று விடும்படி இத்தாலிய போலீசார் தண்டனை விதித்திருப்பது பற்றி, ஜெர்மன் அரசாங்கத்திற்கும் சுவிஸ் அரசாங்கத்திற்கும் பிரிட்டிஷ் அரசாங்கம் தெரிவித்திருப்பதாக பிரிட்டிஷ் அன்னிய நாட்டு மந்திரி மிஸ்டர் ஆன்டனி ஈடன் காமன்ஸ் சபையில் தெரிவித்தார்.

சென்ற ஜனவரி மாதம் முழுவதிலும், ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பலால் நேர்ந்த சேதம் மற்ற எல்லா மாதங்களில் ஏற்பட்ட சேதத்தை விட மிகமிகக் கொஞ்சம் என்று பிரசிடென்ட் ரூஸ்வெல்டும் மிஸ்டர் சர்ச்சிலும் ஒரு கூட்டறிக்கை வெளியிட்டிருக்கின்றனர்.

பிப்ரவரி 10.—மத்திய ஜெர்மனியிலுள்ள ப்ரன்ஸ்விக்கை நேச நாட்டு விமானங்கள் தாக்கி 89 நாஜி விமானங்களை அழித்தன.

எச். எம். எஸ். "பைட்டர்" என்னும் கப்பல் 2 ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்களை மூழ்கடித்து 5 நீர் மூழ்கிக் கப்பல்களையுந் தாக்கியது.

பிப்ரவரி 12.—ஐரோப்பாவைத் தாக்கும் பொருட்டு ஆயத்தம் செய்யப்பட்டுள்ள படைகளை, மாட்சிமை தங்கிய மன்னர்பிரான், ஜெனரல் சர் பி. மண்ட்காமரி முதலிய உயர்தர உத்தியோகஸ்தர்கள் புடை சூழ, பார்வையிட்டார்.

பிப்ரவரி 13.—தென் கிழக்கு இங்கிலாந்தையும் லண்டன் பகுதியையும் தாக்கிய ஜெர்மன் விமானங்களில் நான்கு விமானங்கள் வீழ்த்தப் பட்டன.

அமெரிக்காவும் அட்லாண்டிக்கும்.

பிப்ரவரி 9.—எதிர் காலத்தில் உலக யுத்தம் நிகழாமல் தற்காக்கும் பொருட்டு, உலகிலுள்ள எல்லா மூலப் பொருட்களையும் திரட்டவேண்டுமென்று அமெரிக்க பொது மக்கள் சபையின் உப தலைவர், மிஸ்டர் ஹென்ரி வாலஸ் வற்புறுத்தினர்.

"கூப்பன்" என்னும் புது மாதிரி அமெரிக்க நாசகாரிக் கப்பல் இன்று வெள்ளோட்டம் பார்க்கப்பட்டது.

பிப்ரவரி 10.—வாஷிங்டனிலுள்ள யு. எஸ். ஆர். ஆர். ஏ--க்கும், ஐரோப்பாவிலும் தூரக் கிழக்கு நாடுகளிலும் உள்ள மாகாணக் காரியாலயங்களுக்கும் தொடர்பமைத்துக் கொள்ளும் பொருட்டு, டிபுடி டைரக்டர் ஜெனரல் மிஸ்டர் ஹியூ ஆர். ஜாக்சன் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பிப்ரவரி 12.—"செரிகைலாய்ஸ்" என்னும் அமெரிக்கக் கப்பலை, பிரஞ்சுக் கப்பற் படைக்கு வழங்கும் போது, பிரான்சு விரைவில் விடுதலையடையு மென்று மிஸ்டர் ரூஸ்வெல்ட் கூறினர்.

இந்தியா, பர்மா, இலங்கை.

பிப்ரவரி 1'.—சிம்லாவில் நடை பெற்ற பர்மா-இந்திய மகா நாட்டில் பர்மா கவர்னர் சர் ரெஜினல்ட் டார்மன் ஸ்மித் ஒரு பிரசங்கம் செய்தார்.

பிப்ரவரி 12.—அடுத்த வாரக் கடைசியில், மேன்மை தங்கிய வைசிராய் பிரபு சென்னைக்கு வருவதாகத் தெரிகிறது.

பிப்ரவரி '3.—தூரக் கிழக்கு நாடுகளில் நேச நாட்டுப் போர் முறை பற்றி, இந்தியா-பர்மா-சீனவிலுள்ள அமெரிக்கப் படைகளின் பிரதம தளபதியான ஜெனரல் ஸ்டில்வெல் ஒரு அறிக்கை விடுத்தார்.

பிப்ரவரி 14.—மத்திய சட்டசபையில் பாதுகாப்பிலாகா காரியதரிசி மிஸ்டர் ஆக்லிவியும், யுத்தக் காரியதரிசி மிஸ்டர் திருவேதியும் பர்மா யுத்தத்தைக் குறித்து அறிக்கைகள் விடுத்தார்கள்.

ரஷ்யாவும் பின்லந்தும்.

பிப்ரவரி 9.—சோவியத் படைகள், ஆரிடேழ், ரடோலி, ஓசிரபோ, நோப்ரி, குசின்ட்சி, மோய்க்கி, கொரொடிஷி, முதலிய இடங்களைக் கைப்பற்றினர்கள்.

பிப்ரவரி 10.—க்ரிவாய்ராக்கை செம்படைகள் ஏறக் குறைய வளைந்து கொண்டு விட்டன. பல்யவா, சபடாப்கோ, எமோர்ஸ்டியே, டால்மொசெபோ முதலிய இடங்களையும் செம்படைகள் கைப்பற்றின.

பிப்ரவரி 11.—...ப்டுக்கா, ஜெகன்ச்சா ஆகிய இடங்களை செம்படைகள் கைப்பற்றின.

ரஷ்ய-போலந்து தகராறு பற்றி ஸ்டாலினுக்கும் சர்ச்சிலுக்கும் கடிதங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது.

பிப்ரவரி 12.—படட்ஸ்கியாவை செம்படைகள் கைப்பற்றின.

பிப்ரவரி 13.—லுகா, குடோப், போர்லொ, லியாடி முதலிய 800 கிராமங்களை செம்படைகள் கைப்பற்றின.

பிப்ரவரி 14.—குர்சுன் என்னுமிடத்தை செம்படைகள் கைப்பற்றின.

மிஸ்டர் பாசிகிவி என்னும் பின்லந்து அரசியல் வாதி ரஷ்யாவுக்கு சமாதான ஏற்பாடுகள் பற்றி தெரிவித்திருப்பதாக தெரிகிறது.

இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்தியதரைக் கடல் பகுதி.

பிப்ரவரி 10.—செமிடிக் ஜாதியாருக்கு விரோதமாகவுள்ள எல்லா சட்டங்களையும் ரத்து செய்து விட்டதாக இத்தாலிய மன்னர் ஒரு பிரகடனம் செய்திருக்கிறார்.

பிப்ரவரி 13.—காசினோவுக்குள் கடும் போராட்டம் நடைபெறுகிறது.

பிப்ரவரி 15.—காசினோவில் மூன்றில் ஒரு பங்கு நேச நாட்டினர் கைப்பற்றி விட்டனர்.

விஷி, சுயேச்சை பிரான்சு, எதிரிகள் வயப்பட்ட நாடுகள்.

பிப்ரவரி 10.—பாரிசுக்கு அருகில் ஒரு விமான யுத்தம் நடைபெற்றது.

ஹாலந்தில் நாஜிகள் வசமுள்ள இல்ஸ், ரிஜென் என்னும் போர் விமான தளங்கள் வெடி குண்டுகளால் தாக்குண்டன.

பிப்ரவரி 12.—போலந்தில் எல்லாக் கட்சியினரையும் கொண்டு ஒரு தேசிய கௌன்சில் ஏற்பட்டிருக்கிறது.

யுகோஸ்லாவ் உள் நாட்டுப் பொது ஜன யூனியன் ஒன்றேற்பட்டிருப்பதாக, கெய்ரோவிலுள்ள யுகோஸ்லாவ் அரசாங்கம் பிரகடனம் செய்தது.

பிப்ரவரி 15.—போலந்து பிரதம மந்திரி எம். மிகொலாக்சிக் இப்போது லண்டனி லிருக்க வேண்டியது அவசியமா யிருக்கிறபடியால், வாஷிங்டன் பயணத்தை நிறுத்தி விட்டதாக, போலந்து அரசாங்க அறிக்கை யொன்று கூறுகிறது.

நடு நிலைமை நாடுகள்.

பிப்ரவரி 10.—அமெரிக்காவில் உள்ள ஈரான் அரசாங்க தூதர் பதவியையும், ஈரானிலுள்ள அமெரிக்க தூதர் பதவியையும் உயர்த்தி, 'அம்பாசிடர்'களாக்க வேண்டுமென்று முடிவாகி யிருக்கிறது.

பிப்ரவரி 11.—சென்ற 5 வாரங்களுக்கு மேலாகவே, பிரிட்டிஷ் துருக்கி இராணுவ அதிகாரிகள் கலந்து பேசிக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

ஸ்பெய்னை நடு நிலைமை நாடாகவே வைத்துக் கொண்டிருக்கும் சர் சாமுவேல் ஹோரைப் பாராட்டி, மிஸ்டர் ஈடன் பேசினர்.

தூரக் கிழக்கு நாடுகள்.

பிப்ரவரி 10.—நியூ பிரிட்டனைச் சேர்ந்த ரபாலில், 34 ஜப்பானிய விமானங்களை, அமெரிக்க விமானங்கள் நாசஞ் செய்தன.

யுத்த நிலைமை பற்றி ஆஸ்திரேலிய முதன் மந்திரி மிஸ்டர் கர்ட்டின் ஒரு அறிக்கை விடுத்தார்.

பிப்ரவரி 11.—ஸ்வான் தீப கற்பம் முழுதும் நேச நாட்டினர் வசப்பட்டது.

ஜப்பானியர் வசம் அடைபட்டும் யுத்தக் கைதியாகவும் உள்ள அமெரிக்கர்களைக் கொடுமைப் படுத்துவதை ஆட்சேபித்து, ஜப்பானிய அரசாங்கத்திற்கு அமெரிக்க அரசாங்கம் அனுப்பிய கடிதம் போய்ச் சேர்ந்து விட்டதென்று மிஸ்டர் எட்வர்ட் ஆர். ஸ்டாட்டினஸ் அறிவித்தார்.

12 ஜப்பானிய சப்ளை கப்பல்களை அமெரிக்க நீர் மூழ்கிக் கப்பல்கள் மூழ்கடித்து விட்டதாக, வாஷிங்டனில் அறிவிக்கப்படுகிறது.

பிப்ரவரி 13.—அமெரிக்க விமானங்கள் ரபாலைத் தாக்கும் போது 32 ஜப்பானிய விமானங்கள் நாசமாயின.

பிப்ரவரி 14.—சென்ற 14 நாட்களில் 12-வது முறையாக ரபால் தாக்கப்பட்டது.

பிப்ரவரி 15.—பூசோவுக்கு அப்பால், நேச நாட்டு விமானப் படைகள் 4 ஜப்பானியக் கப்பல்களை மூழ்கடித்து விட்டன என்று தெரிகிறது.

ருக்கா தீவை நேச தேசப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

(11-ம் பக்கம் தொடர்ச்சி.)

அங்கத்தினர்க ளிருக்கிறார்கள். துருவத்தைக் கண்டு பிடிக்கக் கிளம்பிய 18 கோஷ்டிகளில் முதன் முதல் கிளம்பியது 1887-ம் வருஷத்தில் தான். இந்த 18 கோஷ்டிகளையும் சேர்ந்தவர்கள் தான் அந்தச் சங்கத்தின் அங்கத்தினர்கள். என்றாலும், 1910-ம் வருஷம் "டெர்ரா நோவா" என்னும் கப்பலில் கிளம்பியவர்களிலும் பிறகு கிளம்பிய பீட்சிக் கோஷ்டியினருக் குள்ளாகவும், வாரண்ட் ஆபீசர் ஹூப்பர் ஒருவர் தான், உயிரோடிருக்கிறார். காப்டன் ஸ்காட்டினுடைய சவத்தைக் கண்டு அதைப் புதைப்பதற்கு உதவியவரும் இவரே. இவருடைய சட்டை மார்பில் ஒரு வெள்ளை நாடாவில், சிறிய வெள்ளை ரோசாப் பதக்கம் தொங்குகிறது. அதுதான் அன்டார்க்டிக் பதக்கம்.

ஆகவே, தென்னிந்தியாவில் ஒரு விமானியா யிருக்கும் இவர், நான்கு வகைப் படைகளில் அதாவது: வியாபாரக் கப்பல், போர்க் கப்பல், தரைப் படை, பிரிட்டிஷ் விமானப் படை ஆகியவற்றில் வேலை செய்தவர்.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.